ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | விபவ ஆண்டு மாசித் திங்கள் 10—3—89 | இதழ் 4

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை 600

தருமை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்



மகோதய புண்ணிய தினத்தன்று
பூம்புகார், காவிரி சங்கமத்தில் கடல்நீராடிய காட்சி

6—2—1989

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

சிவசத்தி யைத்திளைப்ப
ராதிமுத்த ரென்னு
மவசத்த மாபா
தகமென் — சிவசத்தி
தன்னைக்கண் டாங்கருளால்
சச்சிதா நந்தமெனு
மன்னைத் திளைத்துவாழ் வார்.

— முத்திநிச்சயம் 18

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 48 | 10–3–89 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஆலயம், அறநிலையங் களுக்குத் தன்னாட்சி வாரியம் ...	169
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	175
3	போதமும் சித்தியும் ...	179
4	நந்தி திருவவதாரம் ...	182
5	சுக்கில ஆண்டிற் சுகம்	185
6	கர்நாடக இசையில் கமகம் ...	186
7	சித்தர்க்காடு - விளநகர் - ஸ்ரீசம்பந்தர்கோயில்களின் சில கல்வெட்டுக்கள் ...	192
8	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	196
9	கவிதைக் கடிதம் ...	200
10	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	201
11	பார்வையாளர் குறிப்பு நகல்	203, 212
12	கழறிற்றறிவார் ...	204
13	செய்திகள் ...	209
14	நாட்டம் அதுவாய் நட	212
15	எதிர்காலம் ...	213
16	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-2. ...	217

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 4

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ மாசி 10—3—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஆலயம், அறநிலையங்களுக்குத் தன்னாட்சி வாரியம்

இந்துக்களின் மனக்குறை :

தமிழ்நாட்டில் இந்துசமய அறநிலையங்கள் மற்றும் திருக்கோயில்களை அரசு பராமரித்து வரும் முறைபற்றி, கடந்த பல ஆண்டுகளாகவே மக்களிடையே பரவலான அதிருப்தி நிலவி வந்துள்ளது. சிறுபான்மைச் சமயத்தவர் பெற்றுவரும் உரிமைகள் கூடப் பெரும்பான்மை இந்து சமயத்தவர்க்கு மறுக்கப்பட்டமை பலராலும், பலகாலும் சுட்டிக்காட்டப்பட்டன. அரசின், அறங்காவலர் நியமனமுறை, அறநிலைய வருவாய்களை விரையம் செய்தல், அன்றாட நிர்வாகத்தில் நிகழ்த்தும் குறுக்கீடுகள்,

அரசியல் காரணங்களுக்காக அறநிலைய வருவாய்வழிகளை முடக்கும் நீதியற்ற போக்கு முதலியன அரசின் கட்டுப்பாட்டிலிருந்து இந்து சமய அறநிலையங்களை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கைக்குக் காரணங்களாயின. பல்வேறு அமைப்புக்கள் அஹிம்ஸா போராட்டங்களை நிகழ்த்தின. கடந்த இருபது ஆண்டுகளாக மேலும் மேலும் நிர்வாகச் சிக்கல்கள் அதிகரித்தனவே அன்றி, தீர்வுகளுக்கு வழிகாணப்படவில்லை.

அரசின் அழைப்பு :

இந்து மக்களின் ஆத்திரம் அதிகரித்து வருவதை ஒருவாறு உணர்ந்திருந்த அரசியல் கட்சிகள், இவ்வாண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலை ஒட்டி வெளியிட்ட தத்தம் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் அரசின் கட்டுப் பாட்டுக்கு உட்படாத, ஆனால் அரசின் மேலாண்மைக்குட்பட்ட இந்து சமய அறவோர் ஆன்றோர் வாரியம் ஒன்றை அமைக்கக் கொள்கை அளவில் ஒப்புதல் தெரிவித்திருந்தன. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதல்வர் கருணாநிதி அவர்கள் தம் கட்சித் தேர்தல் அறிக்கையில் குறித்திருந்தவாறு கடந்த 10—3—89 அன்று இது பற்றிக் கலந்து ஆலோசித்து முடிபுகாண வருமாறு இந்து சமயத் திருமடங்களின் தலைவர்கள், சமய அமைப்புக்களின் சார்பாளர்கள், சமயச் சான்றோர்கள் முதலியோர்க்கு அரசுச் செயலர் வாயிலாகத் தனித்தனியே அழைப்பு விடுத்திருந்தார்கள்.

தருமையில் ஆலோசனை :

தமிழக அரசின் இந்நலெண்ண முயற்சியை உரியவாறு பயன்கொள்ள வேண்டும் என்று திருவுள்ளம் பற்றிய தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தமிழக ஆதீனத் திருமடங்களின் தலைவர்கள் அனைவரும் முன்னதாகவே கலந்துரை யாடி ஒரு பொதுக் கருத்துக்கு வருவது பயன்தருவதாக அமையும் என்ற நோக்கில் 8—3—89 அன்று தருமையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் ஏற்படுத்தினார்கள். தருமைக் குருமணி அவர்களின் அழைப்பை ஏற்றுத் தருமைக்கு வருகை தந்த ஆதீனத் திருமடங் களின் தலைவர்கள் முறையாக வரவேற்கப்பட்டனர்.

தருமைக் குருமணியின் முன்னுரை :

8—3—89 புதன்கிழமை காலை 11-30 மணி அளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில்,

தமிழக ஆதினத்திருமடங்களின் தலைவர்கள், ஆதீனப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்களான இந்து சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்க ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது. தருமைக் குருமணி அவர்கள் முதன்மை உரை நிகழ்த்தி, தற்போதுள்ள நிலையில், திட்டவட்டமான, ஒருங்கிணைந்த ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என்றும், அரசின் முழுக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட முனையும் இந்நேரத்தில், அறநிலைய வருவாய்களைப் பெருக்கவும், அதைக் தக்கவகையில் காக்கவும் சமயம், தத்துவம், கலை, பண்பாடுகளை வளர்க்கும் வகையில் வகுக்கவும் வகைகாண வேண்டும் என்றும், இதற்கு அரசின் முழு ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்றும், கி. பி. 1927 இல் இயற்றப்பட்ட தமிழ் நாடு அரசின் "இந்துசமய - அறநிலையப் பாதுகாப்புக் கழகம்" என்ற அமைப்பின் சட்டதிட்டங்களில் சில மாற்றங்களைச் செய்து, பழைய நிலையைத் தொடரச் செய்வது, ஆலயங்கள், அறநிலையங்களுக்கும் அரசிற்கும் உகந்ததாக இருக்கும் என்றும் கலந்துரையாடலுக்கு அடித்தளம் அமைத்தார்கள்.

பங்கேற்றவர்கள் :

ஆலோசனைக் கூட்டத்தில், குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம், மயிலம் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம், பேரூர் ஆதீனம், கோவை கௌமார மடாலயம் முதலிய திருமடங்களின் தலைவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் அவர்களும், தவத்திரு ஊரன் அடிகளார், வேளாக்குறிச்சி ஆதீனப் பிரதிநிதி, திருவாவடுதுறை ஆதீன மேலாளர், விசுவ இந்து பரிஷத்தின் பிரதிநிதிகள் மற்றும் வழக்கறிஞர்கள், அரசு ஓய்வுபெற்ற அதிகாரிகள், கல்லூரிப் பேராசிரியர்கள் பங்கேற்று, ஆதீனத் திருமடங்களின் சார்பில் வழங்கப்பட வேண்டிய அறிக்கையொன்றை உருவாக்க உரிய ஆலோசனைகள் வழங்கினர்கள். இஸ்லாமிய அறத்துறை நிர்வாகமாகிய வக்ஃப்வாரிய அமைப்பு முறை, கத்தோலிக்கத் திருச்சபை நிர்வாக அமைப்புமுறை பற்றியும் விரிவாக ஆலோசிக்கப்பட்டன

ஆய்வுக்குரிய செய்திகள் :

அரசு, ஆலோசனைக் கூட்ட அழைப்பிதழில் குறிக்கப் பெற்றிருந்த ஆய்வுக்குரிய செய்திகள் பத்து. அவையாவன:

1. திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல், அவற்றின

மேலும் வளப்படுத்துதல். 2. திருக்கோயில்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், பாதுகாத்தல், வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல். 3. திருக்கோயில் நிர்வாகத்தில் காணப்படும் குறைபாடுகளும், முறைகேடுகளும், அவற்றை நீக்கும் வழிகளும். 4. திருக்கோயில் நிர்வாகத்தில் வழிபடுவோரின்பங்கு. 5. திருக்கோயில் நிர்வாகம் அமைய வேண்டிய முறை 6. திருப்பணி மற்றும் பழுதுபார்த்தல் பற்றிய வழிமுறைகள். 7. அன்றாட பூசை மற்றும் வழக்கமான திருவிழாக்கள் செவ்வனே நடைபெற ஆலோசனைகள். 8. திருக்குளம், திருத்தேர் ஆகியவற்றினைச் செப்பனிடுவதுபற்றிய ஆலோசனைகள். 9. வழிபாட்டுமுறையைச் சீராகக் கடைபிடிக்கப் பயிற்சி ஏற்பாடுகள் செய்தல். 10. திருக்கோயில் மற்றும் அதன் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பிற்கான வழிமுறைகள். இப்பத்துசெய்திகளும் அறநிலைய இலாகாவினால் ஆலோசனையாளர்கட்கு அனுப்பப்பெற்றவை. இவை பற்றி விவாதிக்கப்பெற்று விரிவான ஆலோசனைகளுக்குப்பின் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பெற்றது. அதனை 10—3—89இல் தமிழக அரசு நடத்தும் ஆலோசனைக் கூட்டத்தில் சேர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப் பெற்றது.

அறிக்கைச் சுருக்கம் :

தட்டச்சு செய்யப்பெற்ற முழுத்தாள் பத்துப்பக்க அறிக்கையில் விரிவான ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன. அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

திருக்கோயில் நிர்வாகம் பொதுவாக இந்துசமயத் தலைவர்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் நடத்தப்பெறுதல் வேண்டும். அரசு, மேலாண்மை,தணிக்கையைமட்டும்வைத்துக்கொள்ளலாம்.

பல்கலைக் கழக வடிவமைப்பில் "இந்து அறநிலைய ஆட்சி வாரியம்" தன்னாட்சிமுறையில் இயங்கச்சட்டம் இயற்றி, நிர்வாகம் செய்யும் ஏற்பாட்டுக்குத் தமிழ்நாடு அரசு தக்க சட்டம் இயற்ற வேண்டும். சிண்டிகேட், செனட் அமைப்பில் இருவகை ஆட்சிக் குழுக்கள் அமைதல் வேண்டும். முதல் குழுவிற்கு ஆதீனத் தலைவர் ஒருவர் தலைவராக அமைதல் வேண்டும். தலைமை ஐந்தாண்டுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் அமைதல் வேண்டும். குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களிடையே தேர்வு செய்யப்பெற்ற ஒருவர், சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், தமிழகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருவர், தமிழ்நாடு அரசின் நியமன உறுப்பினர் இருவர், மேலும் சட்ட வல்லுநர் அல்லது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர். இந்த உயர்நிலை ஆட்சிக்

குழுவே தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அறநிலையங்களின் ஆட்சி செய்யும் உரிமைகளையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கும். இந்தக் குழு ஆண்டுதோறும் நிர்வாக அறிக்கையையும், தணிக்கை அறிக்கையையும் அரசுக்கு அனுப்பிவைக்கும்.

இரண்டாம் குழு, பேரவை அமைப்பில் (செனட்) செயல்படும். இக்குழு, ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைகள் செய்யும் உரிமையுடையது. இக்குழுவில் உயர்நிலை ஆட்சிக்குழு உறுப்பினர்களோடு இரண்டு, மூன்று, நான்காம் நிலை திருக்கோயில் அறங்காவலர், குழுவினரிடையே தேர்ந்தெடுக்கப் பெற்ற தலைவர்கள், சமய நிறுவனங்களின் பேராளர்கள் தெய்விகப் பேரவையின் மாவட்டத் தலைவர்கள், தமிழகத் திருமடங்களின் நியமன உறுப்பினர்கள், தத்துவத்துறை அறிஞர்கள், வேதசிரோமணிகள், ஓதுவார்கள், சிவாசாரியார்கள், பட்டாசாரியர்கள், ஸ்தபதிகள், மகளிர்மன்றப் பிரதிநிதிகள், ஆதிதிராவிடர்கள், மீனவர்கள் உட்பட ஏறத்தாழ 200 உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

திருக்கோயில் அறநிலையங்களின் சொத்துக்களில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் கூடாது. ஆலய வருவாயை உரியவாறு உறுதிசெய்ய வேண்டும். அறநிலைய வளர்ச்சிக்கு உரிய ஒத்துழைப்பை அரசு வழங்கவேண்டும். திருப்பணிகளுக்காக ஒருநிதிநிலை கார்ப்பரேஷன் ஏற்படுத்தவேண்டும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரியவர்களை முறையாகப் பயிற்றுவிக்க, பயிற்சி நிலையங்களை உருவாக்க வேண்டும். திருக்கோயிலை ஒட்டிய பகுதிகளைப் புனித இடங்களாக அறிவிக்க வேண்டும்

ஆலோசனைக் கூட்டம் :

ஆதினத்திருமடங்களின் தலைவர்கள் பலரும்சேர்ந்து தயாரித்த இவ்வறிக்கை 10–3–89 அன்று தமிழக முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற சமயச்சான்றோர் கூட்டத்தில் வழங்கப்பெற்றது. பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர். பல்வேறு கோரிக்கைகளையும் முறையாகப் பரிசீலித்து மூன்று மாதத்துக்குள் அறிக்கை வழங்குமாறு தமிழக முதலமைச்சர் தவத்திரு குன்றக்குடி அடிகளாளரைத்தலைவராகக் கொண்ட ஐவர் குழுஒன்றை அமைத்துள்ளார். குழுவில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன், காஞ்சிபுரம் புலவர். திரு. பு. மா. ஜெயசெந்தில்நாதன், ஸ்ரீரங்கம் திரு. திருமலை ஐயங்கார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வேண்டுகோள் :

ஆய்வுக் குழுவினர் இந்துமதத் தலைவர்கள், இந்துமத அமைப்புக்கள். மற்றும் இந்துமத அபிமானிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து தகுந்த ஒரு அறிக்கையை வழங்கும் என்று ஞானசம்பந்தம் எதிர்பார்க்கிறது. தமிழக அரசும், உண்மையான, நல்லெண்ணத்தோடு, இந்துமத வளர்ச்சிக்கு உரியவழிவகை காணும் சட்டங்களை இயற்றும் என்றும் எதிர்ப்பார்க்கிறோம். மக்கள் இவ்வரிய வாய்ப்பினைப் பயன் கொண்டு நமது சமய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்ப்பார்களாக. மகேசன் அறநிலையங்கள் வாழ அதன்வழி மக்கள் வளமுடன் வாழ வழிவகுப்பானாக.

ஆலயம் அறநிலையங்கள் வாழ்க!
அரசும் உயிர்களும் அதன்வழி வாழ்க!

சைவ சித்தாந்தம்

கடவுள், உயிர்கள், தளை என்னும் மூன்றும் அழிவில்லாத நித்தியப்பொருள்கள் என்பதும், ஆனால் இவை ஒவ்வொன்றும் தரத்தினில் - தகுதியினில் வேறுபாடு உடையன என்பதும் அறிதல் தகும். கடவுள், கருவி கரணங்கள் இன்றித்தாமே அறியும் தன்மையர்; பேரறிவுப் பொருள்; பேரின்பப்பொருள் உயிர்கள் அறிவுடையன ஆயினும் கருவி, கரணங்கள் இன்றி அறிய இயலாதன. அத்தகைய கருவி கரணங்கள் இருப்பினும் சிற்றறிவும், சிறு தொழிலும் உடையன; இறைவன் அறிவித்தாலன்றி அறிய இயலாதன. இறைவன், கருவி கரணங்களை உயிர்களின் ஈடேற்றம் கருதிப்படைத்துக் கொடுக்கின்றார். இத்தகைய கருவி, கரணங்களைக் கொண்டு உயிர்கள் ஈடேற்றம்பெற்று முடிவில் இறையடியை அடைகின்றன. கடவுள் ஒருவர். உயிர்கள் பல. இதுவே முடிந்த முடிபாகிய சித்தாந்தம்.

தளை என்பது, ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று வகைப்படும். இவையே, இறையடியை உயிர்கள் அடையத் தடையாக இருப்பன. இவற்றினின்று உயிர்கள் விடுபட்டு, இறையருளால் இன்புறும் நிலை எய்தவே உயிர்கள் பல பிறவிகளை எடுக்கின்றன.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவாக
ஸ்ரீ காசியில் நடைபெற்ற

தருமபுர ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின்
மூன்றுவது கருத்தரங்கிற்கு

வழங்கியருளிய

ஆசியுரை

8—12—88

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன் மெய்த் தொண்டர்களே.

விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் :

மனிதன் தன்வாழ்வியலுக்கு ஏற்பத் தன்னைச் சூழ்ந்துள்ள புறப்பொருள்களை ஆய்ந்து அவற்றையும் அவற்றின் பயனையும் தனதாக்கிக்கொள்ள விழைந்த முயற்சியே விஞ்ஞான வளர்ச்சியாகும். வி - ஞானம். மேலான அறிவு, அதாவது கலைஞானம் என்று சொல்லலாம்.

மனிதன் தன் அறிவிற்கும் உணர்விற்கும் எட்டாதபல அனுபவ நிகழ்ச்சிகளைக்கண்டு, அவற்றிற்குரிய காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்ந்து அவற்றின் பயனாகத் தம்மைத்தாம் உருவாக்கிக் கொண்டு உயர்நிலை பெறக்கண்ட முயற்சியே மெய்ஞ்ஞான வளர்ச்சியாகும். மெய் - நிலையானது. ஞானம் - அறிவு. அதாவது உண்மை ஞானம் என்று சொல்வோம்.

மெய்ப்பொருள் மூன்று :

தன் அறிவிற்கும் உணர்விற்கும் எட்டாத அனுபவக் கூறுகளை ஆராய்ந்தவர்கள் பலர். அவர்கள் ஆய்வு, பலதரப்படினும் அவற்றை மூன்றில் அடக்கி விடலாம். 1. அனுபவத்திற்கு இலக்கான உயிர்கள், 2. அவ்வனுபவத்திற்கான காரணங்கள். 3. அவ்விரண்டையும் இயைவித்தற்குரியபொருள் என்பன அவை. இவற்றை ஆராய்ந்தவர்கள் இவற்றிற்குக் கொடுத்த பெயர்கள், உயிர், தளை, இறை என்பனவாம். இவை குறித்த ஆய்வுகளை மேற்கொண்டோர் பலரும் ஒருதலையான முடிவினைக் கூறினார் அல்லர்.

உயிர் – ஆன்மா :

உயிர் என்பது உண்டா? இல்லையா? என்பதிலேயே கருத்து வேற்றுமை கொண்டோர் பலர். ஐம்பூதக்கட்டால் விளையும் உணர்வே உயிர் என்றார் சிலர். இவ்வுடலே உயிர் என்றார் சிலர். ஐம்பொறிகளே உயிர் என்றார் சிலர். உயிரையும் வினையையும் கட்டி நிற்கும் இறையே உயிர் என்றார் சிலர். 'உயிர்க்காற்றே (பிராணவாயு) உயிர் என்றார் சிலர். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கருவிகளே உயிர் என்றார் சிலர். இவை அனைத்தின் கூட்டே உயிர் என்றார் சிலர். இவ்வாறு அவரவரும் தத்தம் உயிர்க்குப்புலனாய அளவில் அமைவதாகக் கூறினர். அவ் வாய்வினை ஆராய்ந்து கண்ட நம்சைவசித்தாந்தச் செந்நெறியினர் ஒரு முடிவினைக்கொண்டனர். அது உயிர் என்பது இவ்வனைத்திலும் வேறாயது என்பது; அது உணர்தற்குரியதன்றிக் காண்டற்குரிய தன்று எனும் முடிவைக் கண்டனர். இனி அத்தகைய உயிர்கள் பல என்றும் அவை தோற்றமில் காலத்தன என்றும் கண்டனர். அதாவது உயிர்கள் ஒரு காலத்தே தோன்றியன அல்ல என்பது.

தளை – வினை :

உயிர்கள் பெறும் அனுபவத்திற்குக் காரணத்தை ஆராய்ந்த வர்களில் சிலர், வினை என்பது ஒன்று இல்லை; அவரவர் செய்யும் முயற்சியும்முயற்சியின்மையுமே இன்பத்துன்பங்களுக்குக் காரணம் என்றனர். அம்முயற்சி உண்மை இன்மைகளுக்கும் காரணம் வினையே என்று முடிவு கண்டனர் நம் சைவசித்தாந்திகள். வினை என்ற சொல்லுக்கு செயல், முயற்சி என்பதே பொருள் என்பதை மற்றையோர் உணர்ந்திலர்.

இறை – கடவுள் :

முயற்சி உண்மைக்கும் இன்மைக்கும் காரணம் வினை என்பது ஒன்று உண்டேனும் அவ்வினை தானே உயிரைச் சேரும் என்று கொண்டனர் ஒருசாரார்.

வினை அறிவற்றது; உயிரோ தனக்குரிய வினையைத் தானாக எடுத்துக்கொள்ள முயற்சிக்காது. எனவே இடைநின்று கூட்ட ஒருவன் வேண்டும் என்றது சைவசித்தாந்தம். அவ்வாறு கூட்டுவோன் இறைவனே என்றும், அப்பெருமான் உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருந்து உயிர்களை உய்வித்தருளுவன் என்றும் அறுதியிட்டுக் கூறியது சைவசித்தாந்தம்.

இவ்வாறு பிறர் பிறர் கூறிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மேலாகவும் தெளிவாகவும் ஆராய்ந்து அறிவிற்கும், தர்க்கத்திற்கும், நடைமுறைக்கும் பொருந்த ஒரு முடிந்தமுடிவான கொள்கையைக் கொண்டதே சைவசித்தாந்தம். இந்நெறியில் நின்று இவற்றைப் பற்றி ஆராய்ந்து வருவோர் மேலும் எண்ணவும் தெளியவும் மேற்கொள்ள எழுந்த நிறுவனமே நமது அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம். அறிதொறும் அறியாமை காண்பது ஆராய்ச்சியின் விளைவன்றோ!

உலகோர்முன் கருத்தரங்கம் :

இவ் ஆய்வுநெறி, உலகோர் அனைவருக்கும் பயன் விளைவிக்க வேண்டும் என்னும் தூய எண்ணத்தால் உலகம் தழுவிய அளவில் இதற்கு முன் 1984இல் தருமையிலும், 1986இல் மலேசியாவிலும் இரு கருத்தரங்குகள் நிகழ்ந்தன. இதுபோது பழமையும் புனிதமும் வாய்ந்த வாரணாசியில் இம்மூன்றாவது கருத்தரங்கு நிகழ்வது பெருமகிழ்வளிக்கிறது.

ஸ்ரீ காசிச் சிறப்பு :

இக்காசியம்பதி இறக்க முத்திதருவது. இந்நிலை எல்லோருக்கும் வாய்ப்பதரிது. சமீபத்தில் நம் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிக்கும், ஸ்ரீ காசிவாசி அருணந்திமுனிவருக்கும் வாய்த்தது. இதேபோல் சிவநெறி நின்று வீடுபெறுதலும் அரிதினும் அரிதே. எனவே இக்காசித் தலத்தில் இச்சைவசித்தாந்தக் கருத்தரங்கு நிகழ்வது பொருத்தமேயாகும். வருணை – அசி எனும் இரு பெரும் நதிகளும் கங்கையில் சங்கமமாகும் இடைப்பகுதியில் இருப்பதால் வாரணாசி என்று காசி வழங்கப்பெறுகிறது. அருள்மிகு விசாலாட்சி

உடனுப அருள்மிகு விசுவநாதப்பெருமான் போதொடு நீர்சுமந்து வந்து தம்மைத் தீண்டி வழிபடவரும் அடியவர்க்கு எளிவந்து நின்று பெரும் கருணை வழங்கியருளும் புனிதமுடையது.

காசியில் கருத்தரங்கம் :

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்து விளங்கும் இப்புண்ணியப்பதியிலேயே நம் ஆதீன நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடத்துத் துறவு பெற்று அருளுபதேசமும்பெற்ற அடியவரும், குரு, இலிங்க, சங்கம வழிபாட்டில் சிறந்தும், உயர்ந்தும் விளங்கியவரும்,மொழியாலும், பண்பாட்டாலும், ஆன்மீக நெறியாலும் ஒருமைப்பாடு கண்டவரும், திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடம் எனும் அருள் நிறுவனம் தோன்றுதற்குக் காரணமாய் இருந்துவரும், அறப்பயனும், அருள் உணர்வும் சிறக்கக் கங்கைக் கரையில் ஸ்ரீ குமாரசாமித் திருமடம் ஒன்று நிறுவி, சைவசித்தாந்தச் செந்நெறி வளர்த்தவரும் ஆன நம் கண்மணியிற்சிறந்த ஸ்ரீகுமரகுருபர முனிவரின் முந்நூறாவது ஆண்டு நினைவாக நம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்றாவது கருத்தரங்கு இத்திருப்பதியில் நிகழ்வது திருவருட் பொருத்தமாகும்; அனைவருக்கும் மகிழ்ச்சிதருவதாகும்.

வாழ்த்து :

இதற்குத் துணைநின்ற நம் கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர் கயிலைமாமுனிவர், பாராட்டுதற்குரிய முப்பெரும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், காசி அரசர், இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அறிஞர்கள் அனைவருக்கும் மேன்மேலும் எல்லா நலன்களும் பெருகவும், இக்கருத்தரங்கின் வழி ஊற்றெடுத்துப் பெருகும் செவ்விய கருத்துக்கள் நற்பயன்தந்து சிறக்கவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

பற்பல சமயமும் படியென நின்றிட
சிற்பரச் சித்தாந்தச் சிரோமணி வாழிய!

வாழ்க உலகெலாம்.

கட்டுரை எண். 14.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

நான்கு வாக்குக்களும் விருத்தியாகும் முறைமை :

சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்களும் பஞ்சகலைகளையும் பற்றுக்கோடாகக் கொண்டு ஐந்து வகைகளாக விருத்திப்படும். நான்கு வாக்குக்களில் சூக்குமை என்பது, அதிசூக்குமை, சூக்குமை என இரண்டு வகைப் படும்; எனவே ஐந்தாயிற்று. அதிசூக்குமைவாக்குச் சாந்தியதீத கலையையும் சூக்குமை வாக்குச் சாந்திகலையையும் பைசந்தி வாக்கு வித்தியா கலையையும், மத்திமை வாக்குப் பிரதிட்டா கலையையும், வைகரி வாக்கு நிவிர்த்தி கலையையும் பற்றுக்கோடாகக் கொண்டு நிற்கும். இவை காரியப்படுதல், புடவை கூடாரமானதுபோல் விருத்திப்பட்டு நிற்கும். அதாவது அசுத்தமாயா காரியம்போலப் பரிணமம் அன்று; சுத்தமாயையினின்றும் விருத்தியாய்க் காரியப் படும்.

விருத்தி என்பதற்கும் பரிணமம் என்பதற்கும் வேறுபாடு அறிதல் அவசியம். விருத்தி என்பது, ஒருபொருள் அப்படியே காரியப்படுதல். (புடவை கூடாரமானது போல்); பரிணமம் என்பது, ஒன்று பிறிதொன்றாய் மாறுதல்; வளர்தல். (பால் தயிரானது போல்.) இவ்வாக்குக்கள், சுத்தப்பிரம வாதிகள் கூறுகின்ற பிரமம் அன்று; சைவசித்தாந்திகள் கூறும் சுத்தமாயா காரியம் ஆகும் இக்கருத்துக்களை,

"நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்சதாகச் செயல பரிணமமன்று;
புகழ்ந்திடும் விருத்தியாகும்; படம் குடிலானல் போல
மகிழ்ந்திடும் பிரமமன்று; மாமாயை என்பர் நல்லோர்."

என்னும் பாடலில் ஆசிரியர் விளக்குகிருர். இதில் 'படம்' என்பதற்குப் "புடவை" என்றும் "குடில்" என்பதற்குக் கூடாரம் என்றும் பொருள்.

சுத்தமாயா காரியமே முதற் காரணம் :

அடுத்த பாடலில், மந்திரேசுரர் மந்திரமகேசுரர், அணுசதா சிவர் என்னும் மூவருக்கும் உரியவிளக்கங்களை ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் கூறுகின்றார். இம்மூவரும் அபரமுத்தாகள் எனப் படுவர். இவர்கள் விஞ்ஞான கலர்கள் அல்லர். விஞ்ஞான கலருக்கு ஒருமலம் உண்டு. இவர்கள் மலம்நீங்கப்பெற்று, அதிகாரமலமாத்திர முடையவர்; அபரகளாயிருப்பர். இவர் களுக்கு வேண்டப்படுகின்ற பதங்களும், அக்கரங்களும், புவனங் களும் மந்திரங்களும், தத்துவங்களும், சரீரங்களும், போகங்களும் கரணங்களும் ஆகிய எல்லாவற்றையும் சுத்தமாயாகாரியமான விந்துவே முதற்காரணமாகி நின்று செலுத்தும்.

> " வித்தைகள் வித்தை ஈசர் சதாசிவர் என்றிவர்க்கு
> வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்திரங்கள்
> தத்துவம் சரீரம் யோகம் கரணங்கள் தாம் எலாமும்
> உய்த்திடும் வயிந்தவம் தான் உபாதானமாகி நின்றே. "

என்னும் பாடல் அக்கருத்துக்களை விளக்குகிறது.

வாக்குக்களால் உயிர்கள் பெறும் நன்மை :

அடுத்த பாடலில் நான்கு வாக்குக்களாலும் உயிர்கள்பெறும் நன்மை கூறப்படுகிறது. சூக்குமை முதலிய நான்கு வாக்குக்களா லும் விஞ்ஞானகலர் முதலிய மூவகை உயிர்களுக்கும் விடய ஞானம் உண்டாகும். இந்த ஞானம் நீங்க, மெய்ஞானம்வரின் முத்திஉண்டாம்.

> " மூவகை அணுக்களுக்கு முறைமையின் விந்து ஞானம்
> மேவின தில்லையாகில் விளங்கிய ஞானம் இன்றும்
> ஓவிட விந்து ஞான முதிப்பதோர் ஞானம் உண்டேல்
> சேவுயர் கொடியினன் தன்சேவடி சேரலாமே. "

என்னும் பாடல் அக்கருத்துக்களை விளக்குகிறது. மூவகை அணுக் கள் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை உயிர்கள். விந்து ஞானம் - நான்கு வாக்குக்களாலும் உண்டாகும் ஞானம்.

மூவகையில் அருளும் முதல்வன் :

சூக்குமமாகிய மாயையினின்றும் தூலமாகிய கலையாதி தத்துவங்கள் தோன்றி, அவை உடலும் உயிரும் போன்ற தன்மை

புடையனவாய் அத்தூலங்களினின்றும் அவற்றினும் தூலமான காரியமேயாய்த் தோன்றுவனவாகும். இங்ஙனம் காரியப்பிரபஞ்ச மெல்லாம் விரிவதும் ஒடுங்குவதுமாயிருக்கும். விரிந்துதோன்றுதலை நோக்குமிடத்து பேதாபேதமாம்; ஒடுங்குதலை நோக்குமிடத்து அபேதமாம். முதல்வன் ஒருவனே, அவையுமாகி, அவற்றின் வேறுமாகி அவற்றோடு உடனுமாகி நின்று, அநந்தர், சீகண்டர் வாயிலாக அவற்றைக் காரியப்படுத்துவன். இக்கருத்துக்களைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

"அருவினில் உருவம் தோன்றி அங்கஅங்கி பாவமாகி
உருவினில் உருவமாயே உதித்திடும் உலகமெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா பேதமொடு அபேதமாகும்
ஒருவனே எல்லாமாகி அல்லவாய் உடனுமாவான்."

மாயாவாதிகளுக்கு மறுப்பு :

இனி, ஆசிரியர் அடுத்த பாடலில், மாயாவாதிகளுக்கு மறுப்புத் தருகின்றார். மாயாவாதிகள் அருவமாகிய மாயை உருவமாகிய உலகத்தைத் தோற்றுவிக்காது எனவும் விகாரம் இல்லாத மாயையிலிருந்து விகாரமாகிய உலகம் தோன்றாது எனவும் கூறுவர். அவர்கள், அருவமும் அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும் உருவமும் விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்களும் மேகங்களும் அம்மேகங்களில் பல விகாரங்களும் பல ஓசைகளும் பிறவும் தோன்றும் என்பதனை உடன்படுவர். ஆதலால் இங்ஙனம் கூறுதல் அவர்கள் மதத்திற்கே முரணாய் முடியும் என்று கூறி மறுக்கின்றார்.

"அருவுரு ஈனுதாகும் விகாரமும் அவிகாரத்தின்
வருவதும் இல்லை என்னின், வான்வெளி ஆதிபூதம்
தருவது தன்னில் மேக சலனசத் தங்களோடும்
உருவமின் னுருமே றெல்லாம் உதித்திடும் உணர்ந்து
[கொள்ளே."

என்னும் பாடல் சாதுர்யமான அம் மறுப்பை விளக்குகிறது.

(தொடரும்)

நந்தி திருவவதாரம்

தம் சமயக் கடவுளாகிய இயேசு பிறந்த நாசரேத் நகரை வழிபாட்டுத் திருத்தலமாகக் கிறிஸ்தவப் பெருமக்கள் கொள்கின்றனர். அவ்வாறே முகமதியர்கள் தம் கடவுளாகிய முகமதுநபி பிறந்த மெக்கா நகரை வழிபாட்டுத் திருத்தலமாகக் கொள்கின்றனர். அவ்வாறே சீக்கிய சமயத்தினர் அமிர்தசிரஸ் நகரை வழிபாட்டுத் தலமாகக் கொள்கின்றனர்.

சைவ சமயத்தினர் நம் முதற் குருநாதராகிய நந்தியெம் பெருமான் பிறந்த திருத்தலத்தை வழிபாட்டுத் தலமாகக் கொள்ளல் வேண்டாவா? "நங்கள் நாதனும் நந்தி தவம் செய்த செங்கையாளர் ஐயாறும் திகழ்வது" என உபமந்நியு முனிவர் திருவாக்காகச் சேக்கிழார் பெருமான் நமக்குத் தருகிறார்.

நம் குருநாதர் நந்தி பிறந்தருளிய இடத்தில் அல்லவா (திருவையாறு அந்தணர்குறிச்சி குளக்கரை) நாம் இருந்து இவ் விழாவைக் கொண்டாடுகிறோம். நம் குருநாதர் நந்தியெம் பெருமான் திருவவதாரம் செய்த இம்மண் எத்தகைய சிறப்பு உடையது! தென்திருக்கயிலாயம் அல்லவா திருவையாறு! சூரபன்மாதியர்களது துன்பத்திற்காற்றாது தேவர்கள் திருக் கயிலை அடைய அப்போது சிலாதமுனி புத்திரராகிய நந்தியெம் பெருமானை வேண்டி அவர்களருளால் அன்றே சிவபெருமானைக் கண்டார்கள். இச்செய்தியைக் கச்சியப்பரும், வியாசரும் கூறுகின்றார்கள். நந்தியெம் பெருமான்இட்டசாபத்தால் இராவணனது இலங்கை அழிந்தது! நம்குருமரபுக்கெல்லாம் முதற்குருநாதனாகிய நந்தியெம்பெருமான் திருவவதாரம்செய்த திருவூராகிய ஐயாறு தென்னகத்தில் திகழ்வதாக இருப்பதால் உபமந்நியு முனிவரே தெற்கு நோக்கி வணங்கினார். "நம் குலதெய்வ மாமால்" எனப் போற்றப் பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தென்னகத்தில் திருவவதாரம் செய்தற்குரிய காரணங்களுள் திருவையாறு திகழ்வதும் ஒரு காரணமாகும் என உபமந்நியு முனிவர் கூறினார்.

சிலாத முனிவர் நற்புத்திரப்பேறு வேண்டி வேள்வி செய்தற்குப் பூசுத்தியாகிய உழவைச் செய்கின்ற போதே நந்தியெம்பெருமான் நான்கு திருக்கரத்தொடு ஒரு பெட்டியில் இங்குத் தோன்றினார். இத்திருவையாற்றுத் திருமண்ணிலேயே தவம்

செய்தார். செப்பேசன் என்னும் நாமத்தோடு இங்குள்ள திருக்குளத்தில் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்த தன் சதைகளெல்லாம் கரைய, பெருமான், கங்கைநீர், கமலத்தோன் கமண்டல நீர், உமையம்மை கொங்கைநீர், கொண்டல்நீர், குணநந்திவாயின் நீர் என்னும் ஐந்துவித நீர்களால் ஆட்டி அருள்புரிந்ததால் இத்திருவூர் பஞ்சநதம் திருவையாறு எனப் பெயர் பெற்றது.

நம் சிவபெருமானே திருமழபாடி சென்று நந்தியெம் பெருமானுக்குத் திருமணம் நிகழ்த்திய விழாவும் நிகழ்கின்றதென்றால் இத்தகைய சிறப்புக்களைத் நமக்குத்தருகின்ற நந்தியெம் பெருமான் திருவவதாரம் செய்த இடம் வெற்றிடமாகத் திகழலாமா? அங்கு அமர்ந்திருக்கும் விநாயகர் கோவில் சிறப்புறத் திகழவேண்டும் சைவப் பெருமக்கள் அனைவரும் இங்குக் கூடி வழிபட்டு நம்நன்றியை அப்பெருமானுக்குக் காட்ட வேண்டும். திருவையாற்றிற்கு வரும் மக்கள் அனைவரும் இத்திருவிடத்தைக் கண்டு வழிபட வேண்டும் என்பது நம் தருமைக் குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளம்.

மேலும் நந்தியெம்பெருமான் வேண்டிப் பெற்ற ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பதினறு பேறுகளையும் ஐயாறப்பரிடம் நாமும் வேண்டிப் பெருவாழ்வெய்த முயல்வோமாக!

பதினறு பேறுகள்

1. மறைகள் நிந்தனை, சைவ நிந்தனைகளைக் கேட்கப் பொருத மனம் உடையவராக இருத்தல்.
2. ஐம்புல ஆசைகளுக்கு இடம் கொடுக்காத மனமுடையவராக இருத்தல்.
3. பிறவித் துன்பத்தை நீக்க முயலாதவர்களோடு சேராது இருக்கும் மனமுடையவராக இருத்தல்.
4. நல்லற உறுதிஉரைப்பவரோடு நட்புக் கொள்ளும் மனமுடையவராயிருத்தல்.
5. நல்லன்பர்களுக்கு உதவுறும் மனமுடையோராய் இருத்தல்.
6. தவசீலர்கள் நம் தவறுகண்டபோது அதற்குத் தண்டனை தந்தால் அதனை ஏற்றுக் கொள்ளும் மனம்.

7. தவசீலர்கள் காட்டும் உபதேசநெறிகளைக் கடைப் பிடிப்பதில் மனஉறுதி உடையவராக இருத்தல்.
8. அன்பர் தீது செய்தால் கூட அதுவும் சிவன் செயலே எனக் கருதும் மனத் தெளிவுடையவராக இருத்தல்.
9. மனமும் வாக்கும் அன்பர்கள்பால் ஒருப்படுகின்ற மனமுடையவராக இருத்தல்.
10. சிவனடியார்களைக் கனவிலும் மறவாதிருக்கின்ற மனமுடையவராயிருத்தல்.
11. சிவபெருமானையே தெய்வமாக உறுதியாக நம்பி மற்றைய தெய்வங்களை நாடாத உறுதியை மனம் பெறுதல்.
12. இறைவன் புகழை நாள்தோறும் உரைத்து மகிழும் மனமுடையவராயிருத்தல்.
13. பிறர் மனைவியை விரும்பாத நன்னேன்பு கொள்ளும் மனமுடையவராயிருத்தல்.
14. வாய்மையாகப் பிறர் பொருளுக்கு ஆசைப் படாத மனமுடையவராக இருத்தல்.
15. தீமையாம் புறச் சமயங்களில் கருத்தினை நீக்கிடும் மனத்திறம்.
16. யான் எனது என்னும் செருக்கினை மனத்திற் கொள்ளாத துறவுநிலை.

இத்தகைய பதினறு பேறுகளையும் மனம் பெற நந்தியெம் பெருமான் ஐயாறப்பரிடம் வேண்டிப் பெற்ருர். அப்பேறுகளை நாமும் இறைவனிடம் வேண்டிப்பெற முயலுவோமாக. நந்தி யெம்பெருமானது திருவவதாரத்திருநாள் முதல் அப்பெருமானது திருமண ஊர்வல விழாவாகும் ஏழூர் விழா (சப்தஸ்தான விழா) விலும் கலந்து பேரானந்தப் பெருவாழ்வை எய்துவோமாக! தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தென்திருக் கயிலாயமாம் திருவையாற்றில் திருநந்திதேவர் திருஅவதார விழா, திருக்கல்யாணவிழா ஆகியவைகளைச் சிறப்பாக நிகழ்த்து வித்து அன்பர்களை நன்னெறிப்படுத்தும் திறம் நினைந்து பலகாலும் போற்றித் திருவடி துதித்து இன்புறுவோமாக.

— ஐயாற்று அன்பர்.

சுக்கில ஆண்டிற் சுகம்

திரு. அரங்க. முத்துமணி
தஞ்சை - 2

மனிதனது வாழ்க்கைக்கு அறநெறியில்
வழிகாட்ட மதமே வேண்டும்
கனிபோலும் கொள்கைகளைத் தாங்குகின்ற
சைவந்தான் காட்டும் பாதை
தனிற்செலுத்தும் குருமணிகள் பொற்பாத
கமலமெனும் தாள்கள் போற்றி
இனிமையினைக் காண்கின்ற இதயத்தால்
என்றென்றும் இறைஞ்சுகின்றேன்!

★

செடியிற் பூத்துச் சிரிக்கும் மலர்கள்
விடியற் காலையில் வீழ்வதைப் போல....
விபவ யாண்டு விடையினைப் பெற்றுச்
சுபங்கள் காட்டச் சுக்கில ஆண்டை
வந்திடச் செய்தது; வளம்பல பெற்ற
செந்தமிழ் மொழியும் சீர்மிகு சைவமும்
வளமும் நலமும் வானுற வோங்க
அளவில் புகழுடன் அருள்வழி காட்டுக!
திருமுறை பலவும் தேனெனச் சுவைக்க
இருவினை போக்கி இன்பங் கூட்டுக!
மன்பதை யாவும் மகிழ்ச்சி பொங்கிட
அன்பு வழியே அமைதல் நன்றும்!
பசிப்பிணி போக்கிய பண்ணன் மனைபோல்
அசையும் உலகம் அமைந்திட வேண்டும்!
குருமணி யவர்கள் வழங்கும்
அருளுரை போல ஆண்டும் மலர்கவே!

★

மக்களது வாழ்வில் மகிழ்ச்சியுடன் வந்திடுக
சுக்கில ஆண்டிற் சுகம்!

கர்நாடக இசையில் கமகம்

திரு. P. T. R. கமலத்தியாகராஜன்

மதுரை.

[8—1—1988 ஞாயிற்றுக்கிழமையன்று மதுரை ஸத்குருஸங்கீத ஸமாஜத்தில் கிளாரினெட் வித்துவான் ஏ. கே. சி. நடராஜன் அவர்களுக்கு "மதுரகலாப்ரிவீண" என்ற விருது அளித்ததையொட்டி "மேனுட்டிசையும் கர்னடக இசையும் – ஒரு ஒப்புநோக்கு" என்று நடந்த கருத்தரங்கில் வழங்கிய கட்டுரை.]

மேனுட்டு இசைக்கருவியான கிளாரினெட்டைச் சிறப்பாகக் கையாண்டுவரும் திரு. ஏ. கே. சி. நடராஜன் அவர்களுக்கு "மதுரகலாப்ரிவீண" விருது அளிப்பதை இசையன்பர்கள் ஒரு மனதாக வரவேற்கிறார்கள். இந்த நேரத்தில் ஆண்டு விழாவையொட்டி நடக்கும் கருத்தரங்கில் தமிழ்நாட்டு இசைக்கும், மேனுட்டு இசைக்கும் உள்ள, ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது மிகவும் பொருத்தமாகும்.

நான்கு ஆண்டுகள் இங்கிலாந்தில் பொறியியல் பயின்று வேலையும் பார்த்த காலத்தில், மேனுட்டு இசையைஓரளவு இலக்கிய இலக்கண அடிப்படையில் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருந்ததால், இசை மேதைகள் பலர் கூடிய, இந்த அரங்கில் நானும் கலந்து கொள்ளத் துணிவுகொண்டேன். ஒப்புநோக்குவதற்காக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டதின் விளைவாகத் தமிழ்நாட்டு இசையின் பரிணாம வளர்ச்சியை இதுகாறும் தெரிந்து கொண்டதைவிடத் தெளிவாகப் புரிந்து கொண்டதாக என்மனதில் தோன்றுகிறது. அதன் காரணமாக இதுவரை தமிழ் அல்லது கர்நாடக இசை நூல்களில் கூறப்படாதக் கருத்துக்களை, அதாவது என் சொந்த கருத்துக்களை இந்த அரங்கில் எடுத்துக் கூற முற்படுகிறேன். இக் கருத்துக்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆனல் இதுவரை இக்கருத்துக்கள் எந்தத் தமிழ் இசை நூலிலும் கூறப்படவில்லையென்பதை யாரும் மறுக்கமுடியாது.

திரு. ஏ. கே. சி. நடராஜன் அவர்கள் நிகரற்ற முறையில் கையாளும் கிளாரினெட் கருவி ஒரு மேனுட்டுக் கருவி. இதற்கு

முன்னர் சென்னை நகரில் "Corporation Band" - இல் கிளாரினெட் வாசித்ததைக் கேட்ட பலர், அந்தக்கருவி கர்நாடக ஸங்கீதத்திற்கு ஒவ்வாத கருவி என்று முடிவு செய்திருந்தால், ஆச்சர்யபடுவதற்கில்லை. இன்று திரு. நடராஜன் அவர்கள் வாசிப்பதைக் கேட்ட யாருமே, அது கர்நாடக இசைக்கு ஒவ்வாத கருவி என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நான் பத்து ஆண்டுகளாக மேனாட்டு இசைக் கருவியான "Flute" என்ற கருவியை வாசித்துக் கொண்டிருக்கிறேன். இந்தக் கருவியில் "Keys" இருப்பதால் கமகங்கள் வாசிப்பதற்கு ஏற்றதல்ல என்று பலரும் நினைக்கக் கூடும். பேராசிரியர் ஸாம்பமூர்த்தி "Keys" உள்ள வாத்யங்கள் நம் இசைக்கு ஏற்றவையல்ல என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகம் 86 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குழல்மேதைகளை அழைத்துஒரு கருத்தரங்குநடத்தியது. அக்கருத்தரங்கில் ஓரிரு குழல் விற்பன்னர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, அதை மறுத்து. நிருபணத்தால் அவர்களே அந்தக் கருத்தைக் கைவிடும்படிசெய்த ஒருவாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது.

அப்படியானால் கர்நாடக இசையை எந்த மேனாட்டுக் கருவியில் வேண்டுமானாலும் வாசிக்கலாமா? என்ற கேள்வியைச் சிலர் கேட்கலாம். இத்தக் கேள்விக்கு அளிக்கும் பதிலில்தான், கர்நாடக இசைக்கும், மேனாட்டு இசைக்கும் உள்ள அடிப்படை வேற்றுமை இருக்கிறது. மேனாட்டு இசையை எந்தக் கருவியிலும், அதாவது அவர்கள் நாட்டுக் கருவியானாலும் வாசிக்கலாம். நம்நாட்டுக் கருவியானாலும் வாசிக்கலாம்.

கர்நாடக இசையைச் சில கருவிகளைக்கொண்டு நிச்சயமாக வாசிக்க முடியவே முடியாது. ஆனால் வாசிக்க முடிவதும், முடியாததும் அது மேனாட்டு கருவியா அல்லது நம் நாட்டுக் கருவியா என்ற அடிப்படையிலல்ல. அது அந்தக் கருவியின் அமைப்பைப் பொறுத்து இருக்கிறது. உதாரணமாக ஹார்மோனியத்தில் கர்நாடக ஸங்கீதம் வாசிக்க முடியாது. காரணம் ஒவ்வொரு கட்டையும், ஒவ்வொரு ஸ்வரம் வாசிப்பதற்காக ஏற்பட்டது அடுத்தடுத்துள்ள இரண்டு ஸ்வரங்களுக்கு நடுவேயுள்ள ஸ்ருதிகளை வாசிக் முடியாது. ஒரு ஸ்வரத்திலிருந்து. அடுத்த ஸ்வரத்திற்குக் கம்பிதமாகவோ, ஜாருவாகவோ கமகம் வாசிக்கமுடியாது. அதற்கு இடம் கொடுக்காத கருவியில் கர்நாடக இசையை வாசிக்க முடியாது. இந்த அடிப்படை வேற்றுமை மேனாட்டு இசையுடன் மட்டுமல்ல; இந்துஸ்தானி இசையுடனும்உண்டு. அங்குச்சாதாரணமாக ஹார்மோனியத்தை வாய்ப்பாட்டுக்குத் துணைக்கருவியாக

வைத்துக் கொள்கிறார்கள். கர்நாடக இசைக்கே உரித்தான கமகங்களை, ஒருபோதும் ஹார்மோனியத்தில் வாசிக்கவே இயலாது' இதைப்பற்றி சுப்பிரமணிய பாரதியார் நீண்டதொரு கட்டுரையே எழுதியிருக்கிறார். வானொலியில் பல ஆண்டுகள் ஹார்மோனியத் திற்குத் தடையிருந்தது. அண்மையில் என்ன காரணத்தினலோ இதைப் போலவே எத்தனையோ மேனாட்டு வாத்தியங்களும் நம் நாட்டுக் கருவிகளும் உள்ளன. பியானே ஆர்கன் ஸ்வரமண்டலம், ஜலதரங்கம் (ஒரு ஸ்வரத்திற்கு ஒரு கிண்ணம்) என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த ஒரு குறை இல்லாவிட்டால், எந்த மேனாட்டு வாத்யமும், கர்நாடக இசைக்கு உதவும். இதற்கு உதாரணங்கள் வயலின், வயோலோ, மாண்டலின், சித்தார் முதலியவை. இந்தத் தந்தி வாத்யங்களில், ஒவ்வொரு தந்தியிலும், பல ஸ்வரங்கள் வாசிக்கலாம். தந்தியிலே வீணையைப் போல மெட்டுகள் இருக்கலாம் அல்லது கோட்டு வாத்யம் வயலின் போல் மெட்டுகள் இல்லாமலும் இருக்கலாம். "Flute", கிளாரினெட், ஒபோ, நாதஸ்வரம் போன்ற கருவிகளில் உள்ள விரல் துளைகளைத் தந்தி வாத்யத்தில் உள்ள மெட்டுகளுக்கு ஒப்பிடலாம். வயலின் நம்மிசைக்கு உபயோகிக்கக்கூடிய கருவி மட்டுமல்ல. நாளடைவில் இன்றியமையாத கருவியாகவும் வளர்ந்துவிட்டது.

மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, என்னவென்றால் பண்டைத் தமிழ் இசைக்கருவிகளில் முக்கியமான கருவியான யாழும் மேற்கூறிய அடிப்படையில் இன்றைய இசைக்கு ஏற்றுக் கொள்ளமுடியாத ஒரு கருவியாகி விட்டது. யாழ் எப்படியிருந்தது என்றே பலருக்குத் தெரியாது. சமீபகாலத்தில் தமிழ்நாட்டு இசையைப் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவையாவன: ஆபிரகாம் பண்டிதர் எழுதிய "கர்ணாமிர்த சாகரம்", மதுரை பொன்னுச்சாமி பிள்ளையின் "பூர்வ சங்கீத உண்மை" விபுலானந்த அடிகளின் "யாழ்", Dr. S. ராமநாதன் அவர்களின் "சிலப்பதிகாரத் திசை நுணுக்கம்", சேலம் ஜெயலெட்சுமி அவர்கள் எழுதிய "தமிழிசை இலக்கண மரபு", முனைவர் U. P. K. சுந்தரம் எழுதிய "பழந்தமிழிலக்கியத்தில் இசையியல்", திரு. சாம்பமூர்த்தி அவர் களின் தென்னிந்திய இசை Vols 1–5, Flute, மற்றும் மு. அருணாசலம் அவர்கள் எழுதிய "ஆதி சங்கீத மும்மூர்த்திகள்" எனும் நூல்கள். இந்நூல்கள் சிறந்தவையாக விளங்கினாலும் ஒன்றில்கூடத் திட்டவட்டமாக, யாழ் நம் இசைக்கு உதவாது என்று எழுதவில்லை. அது மறைந்ததற்குத் தக்க காரணங்களை எடுத்துக் கூறவில்லை. யாழ் எந்தக் காலத்தில், ஏன் மறைந்தது என்று, ஒரு நூலாசிரியரும் தெளிவாக்கவில்லை.

தமிழ் நாட்டு இசையின் சரித்திரத்தையும் வளர்ச்சியையும் சுருங்கச் சொல்ல வேண்டுமானல், அது யாழின் அடிப்படையிலிருந்து வீணையின் அடிப்படைக்கு மாறினதே.

பண்டைத் தமிழர் வாசித்த யாழும், இக்காலத்தில் வழங்கும் வீணையும் ஒன்றே என்று பலர் தவருக நினைக்கின்றனர். அது முற்றிலும் தவறு. ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் தனித் தனி நரம்பு கட்டப்பெற்றது யாழ். ஒரு நரம்பில் மெட்டுகளின் உதவியால் பல ஸ்வரங்கள் வாசிக்கப்படுவது வீணை.

சங்கத்தொகை நூல்களில் வீணை கூறப்படவில்லை. "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்ற திருவசகப்பாட்டில் இவை இருவேறு கருவிகளாகவே கூறப்பெற்றன. இளங்கோவடிகள் காலத்தில் வீணையிருந்ததை, "நாரதன் வீணை நயந்தெரிபாடலும்" என்ற தொடரில் தெரிகிறது. யாழும் வீணையும் வெவ்வேறு கருவிகளென்பது.

"அறைகலந்த குழல் பெர்ந்தை வீணை யாழும்"

"பண்ணேடு யாழ் வீணை பயின்ருய் போற்றி"

"எழிசை யாழ் வீணை முரலக் கண்டேன்"

என்ற நாவுக்கரசர் பதிகங்களிலும், "குடமுழவங் கொக்கரை வீணை குழல் யாழ்" எனச் சேரமான் பெருமாள் நாயனர்பாட்டிலும், "புகலுமிசை நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நினைவகையிற் சேர்வுற்ற தந்திரிகள்" என்ற சேக்கிழார் வாக்கிலும் தெரிகிறது. சுருங்கச் சொன்னல் சங்க நூல்களில் யாழ் மட்டுமே கூறப் பெறுகிறது. இடைக்காலத்திலே வீணை, யாழ், என்ற இரு கருவி களும் கூறப்பட்டிருக்கின்றன. இன்று யாழ் என்ற கருவி எப்படி யிருக்குமென்று மக்களுக்குத் தெரியாத ஓர் நிலை. இந்த மாற்றம் ஏன், எப்பொழுது? என்று ஆராய்வோம்.

நடைமுறையில் நாம் ஷட்ஜத்தையும், பஞ்சமத்தையும் பேதமற்ற ஸ்வரங்களாகக் கொள்கிரேம். வீணையிலே, ரி, க, ம, தி, நி ஆகிய ஸ்வரங்கள் ஒவ்வொன்றிற்கும், இரண்டு பேதங்கள் உள்ளன. இந்த பனிரண்டு ஸ்வரங்களின் வேறுவேறு கூட்டமைப் பாக "Permutation And Combination" மேள ராகங்களாக வகுத்தால், பூர்வ சங்கீத உண்மையெனும் நூலில் கூறப்பெற்ற 32 மேளங்களைப் பெறலாம்.

இந்த 12 ஸ்வரங்களுடன் ஷட் ஸ்ருதி ரிஷபம் போன்ற விவாதிதோஷத்தை விளைவிக்கும் நான்கு ஸ்வரங்களைச் சேர்த்தால் வேங்கடமகி வகுத்த 72 மேளகர்த்தா ராகங்களைப் பெறுகிரேம்.

தொன்று தொட்டு தமிழ்நாட்டிலும் சரி, மேனுட்டிலும் சரி, ஒரு ஸ்வரத்தை ஆதாரமாகக் கொண்டு யாழின் துணையினல் கிளை ஸ்வரங்கள் நட்பு ஸ்வரங்கள் அடிப்படையில், ஏழு ஸ்வரங்கள் கொண்டு ஒரு மேளத்தைப் பெற்றனர். இந்த மேளம் அனைத்து நாட்டு இசைகளிலும் ஒன்றுகவே இருந்தது. தமிழிசையில் அரும்பாலை (இன்றைய ஸங்கராபரணம்) மேனுட்டு "C Major Scale", இந்துஸ்தானி இசையில் பிலாவல், கிரேக்க நாட்டு "Pythagorean Scale", எல்லாமே ஒரே மேளம் தான்.

இந்த மேளத்திலிருந்து கிரஹபேதம் (Modulation) செய்து, வேறு மேளங்களைப் பெறுவது பழைய வழக்கமாக இருந்தது. அப்படிச் செய்யும்போது தாரக்கிரமம், இளிக்கிரமம், குரற்கிரமம் என்ற முறைகளில் ஒரு ஸ்தாயிக்கு (Octave) 21 ஸ்ருதிகள் பண்டைக் காலத்திலே பெற்றனர். இது இசையியலின் அடிப்படையில் செய்யப்பட்டது. ஆனல் ஸ்வரங்களின் ஸ்தானங்களை மட்டும் வைத்துக்கொண்டு பல கோவைகளாக (Permutation And Combination) மேளங்களைப் பெறுவது ஒரு சிறந்த முறையெனக் கொள்ளமுடியாது. இம்முறையிலே 72 மேள கர்த்தாக்களைப் பெற்றதில் 40 மேளங்கள், விவாதி தோஷத்திற்கு இலக்காகின்றன. 16 ஸ்ருதிகள் மட்டுமே சம்பந்தப்பட்ட இந்த முறையிலே இத்தனை தோஷமுள்ள மேளங்களிருந்தால் 22 ஸ்ருதிகளின் அடிப்படையில் யாராவது செய்ய முன் வந்தால் மேளங்கள் பன்மடங்கு அதிகமாகும். பகைக் குற்றமுள்ள மேளங்கள் அதை விட இன்னும் அதிகமாகும்.

இதற்கு இன்னும் ஒரு உதாரணம் திரு. ஸாம்பமூர்த்தி அவர்கள் 72 மேளங்களைக் கொண்டு 72×72 அல்லது 5184 மேளங்கள் பெற ஒரு முறையை நிலைநாட்ட முயற்சிசெய்திருக்கிருர். இதை இசையுலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. 72 மேளமுறையை மதுரைப் பொன்னுசாமிபிள்ளை முதலியவர்கள் கடுமையாக எதிர்த்த போதிலும், தியாகராஜர், தீக்ஷிதர் போன்றவர்கள் பலர் இந்த மேளங்களில் க்ருதிகள் செய்திருக்கிருர்கள், என்று அமைதி கூறுகிருர்கள். அதை இசையுலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மேளகர்த்தாக்களின் எண்ணிக்கையை அதற்கு மேலும் அதிகரிக்க முயல்வது கறிக்குதவாத ஏட்டுச்சுரக்காய்களைத்தான பயக்கும்.

அறியாமையினல் அதிக மேளங்களுடைய இசைதான் சிறந்த இசை என்று கருதி, சில நூலாசிரியர்கள் எங்கள இசையிலே 72 மேளங்கள் உள்ளன. மேனுட்டிசையில Major Scale, Harmonic Minor Scale, Melodic Minor, என்ற மூன்று மேளங்கள் தான் உள்ளன, என்று மார்தட்டுகிருர்கள். ஆனல் அவர்கள் ஒவ்வொரு மேளத்தையும் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களிலும் கிரஹபேதம்

செய்கிறார்கள். அவ்வாறு செய்யும் போது அவர்களும் பல மேளங்களைப் பெறுகிறார்கள். அந்த மேளங்களுக்குத் தனிப்பெயர் கொடுக்கவில்லையே தவிர, அவைகளை C Major, E Major, F Sharp Major என்று கிரஹத்தைச் சொல்லி அழைக்கிறார்கள். இப்படித் தெரியாமல் ஒப்புநோக்குதல், நமக்கோ நமயிசைக்கோ சிறப்புத் தருவதாக அமையவில்லை.

மேளங்களை விட்டு மீண்டும் யாழ் என்ற கருவியை ஆராய்வோம். ஈடு இணையற்ற ஆராய்ச்சியாளரான விபுலானந்த அடிகள் கூட யாழ் என்னும் கருவியை மீண்டும் உபயோகித்தால் தமிழிசை மறுமலர்ச்சி பெறும் என்று கூறியிருக்கிறார். ஆனால் வல்லுனர் நல்ல காரணங்களுடன் தான்யாழைக் கைவிட்டார்கள்.

இவ்வாறு கூறும் நேரத்தில் யாழ் என்ற கருவியைப் பற்றி நான் தெரிந்து கொண்ட விஷயங்கள் அனைத்தும் அடிகளாரின் "யாழ்" நூலிலிருந்துதான் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய சூழ்நிலையில் யாழைப் பொருத்திப் பார்ப்போம். உதகமண்டலத்திலே, கொடைக்கானலில், ஏற்காட்டில் இருப்பவர்கள் குறிஞ்சி யாழ் வைத்திருப்பார்கள். குறிஞ்சித்திணைக்குரிய அந்த யாழில் குறிஞ்சிப் பண்ணிற்காக மேளங்கட்டியிருக்கும். அதை வாசிக்கும் நேரம் யாமம் அல்லது நள்ளிரவு. இப்படியாக மற்ற திணைகளுக்கு வெவ்வேறாக நால்வகை யாழ்கள், நால்வகைப் பண்களுக்கு மேளம் கூட்டியிருக்கும். அப்பண்களை வாசிக்கும் காலம், நண்பகல், மாலை, எற்பாடு, வைகறை, விடியல் என்று வேறுபட்டிருக்கும். ஒரு யாழ் தாரக் கிரமத்தில் ஸ்ருதி கூட்டப் பட்டிருக்கும், இன்னொன்று இளிக்கிரமத்தில் ஸ்ருதி கூட்டப் பட்டிருக்கும். மற்றொன்று குரற்கிரமத்தின் அடிப்படையில் ஸ்ருதி சேர்க்கப்பட்டிருக்கும். கல்யாணி அல்லது மேற்செம்பாலைப்பண்ணை இசை கூட்டினால் 22 ஸ்ருதிகள், தாரக்கிரமத்தில் 4, 4, 4, 1, 4, 4, 1 என்று அடைவிலும், குரற்கிரமத்தில் 4, 2, 4, 3, 2, 4, 3 என்ற அடைவிலும், இளிக்கிரமத்தில் 2, 4, 4, 3, 2, 4, 3 என்ற அடைவிலும் நிற்கும். இன்றைய சூழ்நிலையில், எந்த நிலத்திலும், எல்லாப் பண்களும் வாசிக்கவேண்டும். ஒரே காலத்தில் அதாவது கச்சேரி நேரமாகிய மாலையில், எல்லாப் பண்களும் வாசிக்க வேண்டும், எந்த யாழில் வாசித்தாலும் ஒரு பண்ணின் ஸ்ருதி அடைவு வேறுபடக்கூடாது. ஒரு பண் பாடிய பிறகு, அடுத்த பண்ணை வாசிக்கும் போது நரம்புகளில் ஸ்ருதியை மாற்றியமைக்க அவசியம் இருக்கக்கூடாது. இன்னும் சதுரப்பாலை முறையில் உள்ள 96 நுண் ஸ்ருதிகளை உணர்த்த, ஒரு ஸ்தாயியில் 100 நரம்புகள் வேண்டும். ஆயிரம் நரம்புகள் கொண்ட பெருங்கலம் அல்லது பேரியாழ் ஒன்றுக்கு வேண்டிய கணக்குகள் (அதாவது நரம்புகளின் அளவுகள், அவைகளுக்கு உண்டான ஸ்ருதிகள்) எல்லாவற்றையும் யாழ் நூலில் விபுலானந்த அடிகள் கொடுத்திருக்கிறார்.

(தொடரும்)

சித்தர்க்காடு - விளநகர் - ஸ்ரீ சம்பந்தர் கோயில்களின் சில கல்வெட்டுகள்

வித்துவான் திரு. தா. குருசாமி

மதுரை.

முன்னுரை :

மார்கழித் திங்களில் குருவழிபாடு கூடியபோது-நமது தருமை ஆதீனச் செந்தமிழ் பரமாசாரிய மூர்த்திகளின் கருணையினால் – படித்தும் அறிவிலாத - ஆய்வுணர்விலாத எங்களை உய்யக் கொண்டருளும் பாங்கில் - ஆய்வுரை செய்வதோடு உரிய தலங்களைக் காட்டி வழிபாடும் கிட்டிடும் வண்ணம் அருளிப்பாடு நிகழும். அந்த அருளிப்பாட்டின் வரிசையில் இவ்வியாண்டு சித்தர்க்காடு-விளநகர்-முதலிய கோயில்களைக் குருமூர்த்தி அவர்களோடு வழிபடும் பேறும் - ஆணைப்படி ஆய்வுநிகழ்த்தவும் வாய்ப்புக்கிட்டியது. முதலில் சித்தர்க்காடு சிந்தனைக்குரியது.

சித்தர்க்காடு :

சந்தானாசிரியர்கள் மரபில் கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் சீகாழிச் சிற்றம்பலநாடிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்ந்து சமாதி கூடிய தலம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள சித்தர்க்காடு. சைவ சமய அன்பர்களில் சிவயோகங்களையும் சைவ சமய தத்துவ உண்மைகளையும் உணரும்வேட்கையுடையோர் †சிற்றம்பலநாடிகள் திருக்கோயிலைத் தேடிவந்து தரிசித்துச் செல்கின்றனர். சித்தர்கள் சமாதி கூடிய இடம் சித்தர்க்காடு எனவும் ஆலயம் சிற்றம்பல நாடிகள் கோயில் எனவும் வழங்கத் தொடங்கின.

சிற்றம்பலநாடிகள் பரம்பரையை விளக்கமாகக் கூறுகின்ற வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள், "ஏககாலத்தில் அறுபத்துமூன்று திருப்பெயருக்கும் சாம்பவ தீக்கையால் சத்யோ நிர்வாண தானம்பண்ணித் தாமும் சிவகதி அடையும் பெருமையுடைய சிற்றம்பலநாடி பண்டாரம்" என்று குறிப்பிடுகிறார்கள். சிற்றம்பலநாடிகள் திருக்கோயில் கர்ப்பக்கிருகப் புறமதிலில் 61 சிவலிங்கத் திருவுருவங்கள் விளங்குவது இவ்வடியவர்களோடு ஆசாரியசமாதி கூடியதை விளக்கும் அடையாளங்களாக உள்ளன.‡

இக்கோயிலின் கர்ப்பக்கிருக வடபுறச்சுவரில் கீழ்க்கண்ட கல்வெட்டு குருவாணையின் மேல்படி எடுக்கப்பட்டது. அஃது கீழ்க் கண்டவாறு அப்படியே தரப்படுகிறது.

---

† சித்தர்க்காடு- அருள்வரலாறு - தருமை ஆதீனம் - முன்னுரை.
‡ வரலாறு ஷெ நூலில் காண்க.

கல்வெட்டு :

சித்தர்க்காடு வடபுறச்சுவரின் கல்வெட்டு அண்மைக்காலத்தது. கல்வெட்டின் தொடக்கத்தில் சூலக்குறி இடப்பட்டுள்ளது. பின்பு கீழ்க்கண்டவாறு வாசகம் தொடர்கிறது.

> விரோதிஞு வைகாசிமீ 5௳ வழுவூரில் இருக்கும் அருணாசலபிள்ளை தருமம். சித்தர்க்காட்டில் பழங்காவிரிக்கு வடபாரிசம் தோட்டம் சித்தர்க்காடுசித்தம்பலஞ்சுவாமிக்கு சித்தர்க்காடு வட்டாரகூடத்தெத்தம் பண்ணினபடியினாலே இத்தருமைத்தைப் பரிபாலனம் பண்ணியபேர்கள் காவிரிக் கரையிலே கொன்றை பேணிய பயனைப் பெறுவார்கள். இத்தன்மத்துக்கு அகிதம் பண்ணினிவர் வம்சவளி(ழி) யற்ற பாவமாவார்கள். இத்தன்மம் பன்மாகேஸ்வர ரக்ஷை. கலியுகாதிஞு 4 ௱ சருகயுக,

விளக்கம் :

இக்கல்வெட்டு கலியுகம் 4011 எனக்காணப்படுவதால் இதன் காலம் தற்சமயம் 179 ஆண்டுகட்கு முன் எனக் கணக்கிடலாம். சுவாமிக்குப்பழங்காவிரிக்கு வடபக்கம் உள்ளதோட்டம் சுவாமி பூஜை களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 'பழங்காவிரி' என்று காணப்படுவது ஆராயத் தக்கது. தற்சமயம் அப்பழங்காவிரி வாய்க்காலாக மறைந்து வருகிறது. அதன் வடபால்தான் காவிரி ஓடுகிறது. இடைப்பட்ட இடத்தில்தான் சிற்றம்பலநாடிகள் கோயில் உள்ளது. இக்கோயிலின் பூஜைக்கும் பிற உபயோகத்துக்கும் விடப்பட்ட அந்நிலம் ஆட்சியில் இருக்கவேண்டும். இத்தோட்டத்தை அறக் கொடை செய்தவர் வழுவூர் அருணாசலம்பிள்ளை. அவர் வாரிசுகள் இருக்கலாம். அவர்களைக் கலந்து மேலும் ஆராய அன்பர்கள் முயலவேண்டும். இத்தர்மத்தைக்காப்பற்ற கொன்றைமரம் வைத்து காவிரியில் சிவனைப் பூஜிக்க மலர் கொடுத்த பயனைப் பெறுவார்கள். எனப் பலசுருதி கூறி-இதனைச் சிவனடியார்கள் காப்பற்றவேண்டும் என்று கூறியிருப்பது - தர்மத்தைக் காக்க ஒவ்வொருவரும் முயல வேண்டும் என்பதாகும்.

சம்பந்தர் கோயில் :

மயிலாடுதுறை-குடந்தை நெடுஞ்சாலையில் சித்தர்க்காடு நவீன அரிசி ஆலைக்குத் தென்பால் ஸ்ரீ பிரமபுரீசர் என்னும் சம்பந்தர் கோயில் மேற்குப்பார்த்த சந்நிதியாய் விளங்குகிறது. தருமைக் குருமகாசந்நிதானம் அவர்களோடு இவ்வாண்டு மார்கழித் திங்களில் வழிபட்டபோது - அவர்கள் ஆய்வுக்குறிப்புள்ள சில கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டன. கோயிலின் சிற்பத்திறன்

கண்டு மகிழத்தக்கன. சம்பந்தர் தங்கியிருந்தபோது ஓர்இரவு தமது சீர்காழிப் பெருமானைத் தரிசித்ததாக ஐதீகம் கூறப்படுகிறது. சம்பந்தரின் திருவுருவம் சுவாமிக்குப் பக்கத்தில் உள்ளது. தருமைக் குருமூர்த்திகள் இக்கோயிலும் சந்தானுசாரியாரின் (பழதைக்கட்டி ஞானசம்பந்தப் பண்டாரம்) குருமூர்த்த ஆலயமாக இருக்கலாம் என்று திருவுளம்பற்றி வருகிறார்கள். சான்றுகிட்டும்போது உண்மை யாகும். மதுரையில் இம்மையில் நன்மை தருவார் சந்நிதி மேற்குப் பார்த்தது. இச்சம்பந்தர்கோயிலும் மேற்குப்பார்த்தது, இன்னும்சில கோயில்கள்மேற்குப்பார்த்துள்ளன. இதுபற்றிமேற்கேஎழுந்தருளிய தேவர் என்னும்கண்டராதித்த சோழர்பற்றி விளக்கம் கூறும்போது 'வீடுபேறு ஒன்றே நல்கும் சந்நிதி – என்றும் சேரநாட்டுவற்கலே யில் (சிவலிங்கம் மேற்குப் பார்த்தது) இவர் வீடுபேறடைந்தார் என்றும் சேரர்வரலாறு (துடிசைகிழார்) நூலில் கூறுவார். ஆதலால் நமது சித்தர்க்காடு சம்பந்தர்கோயில் விசேடச் சிறப்புடையது.

கல்வெட்டு :

இங்குக் கல்வெட்டு இரண்டு உள்ளன. ஒன்று துர்காஜி நவாபு ஆட்சிக் காலத்தது. மற்றொன்று - 1900 ஆம் வருடக் கல்வெட்டு ஆற்காடு நவாபு ஆட்சிக் காலத்துக் கல்வெட்டுப் படிக்க முடியாதபடி அழிந்துள்ளது. எழுதப்பட்ட வாசகம்,

''இரண்டாவது காஜியாஜி துர்க்க
துர்காஜி நவாபு நட...... ''

இது ஆர அமர அன்பர்களால் அத்தலத்தில் சென்று ஆய்ந்து எழுதப்படவேண்டும்.

மற்றொரு கல்வெட்டு :

நடராஜர் சந்நிதியில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு நன்கு படிக்கும்படி உள்ளது. அதன் உண்மைப்படி இது :-

உ சிவமயம் நடராஜர் கலியுகாதிஞு 5001க்கு
இங்கிலீஸ் 1900ஞு தமிழ் சார்வரிஞு வைகாசிமீ 26
சித்தர்க்காடு பருவட வயித்திலிங்கபிள்ளை பாரியாள்
பெரியநாயகத்தாச்சி இந்தச் சபை திருப்பணி தர்மம்.

விளக்கம் :

இக்கல்வெட்டு 1900 வருடத்தைக் காட்டுவதால் இச்சபை கட்டி எண்பத்தொன்பது ஆண்டுகளாகின்றன. மற்ற வாசகங்கள் வெளிப்படையாக உள்ளன. திருப்பணிச் சீலர் வயித்திலியங்கம் பிள்ளை பெரியநாயகத்தாச்சி வழியினரைக் கண்டு நாம் இக்கோயில் பற்றி ஆய்வு செய்யவேண்டும். அன்பர்களும் ஆய்வாராக!

விளநகர் :

திருவிளநகர் - மயிலாடுறை - செம்பொனார்கோயில் இடையில் உள்ள சோணாட்டுப்பாடல் பெற்ற தலத்தில் ஒன்று. விளநகர் தருமை ஆதீன நிர்வாகத்துக்கு உட்பட்ட கோயில். இக்கோயிலின் மிகப்பழைய கல்வெட்டு சுவாமியின் கர்ப்பக் கிருகமண்டபத்துக்கு முன்பு மகாமண்டபத்தில் உள்ளது. அக்கல்வெட்டின்படி இது:

> கீலகவருஷம் சநயருளங தஞ்சைநாட்டு எக்கோஜி பெரியதேவராயனுடைய ஆட்சிக்காலத்தில் ஸ்ரீ முத்துக்குமார சாமித் தம்பிரான் தருமை ஆதீன ஆட்சிக் காலத்தில் கல்வரி மண்டபம் கட்டுவித்துத் திருப்பணி செய்வித்தது. சதாசிவன்சேர்வை.

இக்கல்வெட்டு ஒருதூணில் உள்ளது. விளக்கு ஏற்றிப்படிக்க வேண்டும்.

விளக்கம் :

எக்கோஜிஎன்பவன் மகாசிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரன். சகாஜியின் மகன். இவன் தஞ்சையை ஆண்டகாலம் தஞ்சை நாயக்க மரபுக்குப்பின் கி. பி. 1765 எனக் கணக்கிடப்படுகிறது. ஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் வைத்தீசுவரன் கோயிலின் இரண்டாம்பிராகாரச் சுற்றுமதில், திருமாளிகைப்பத்தி, அம்மன் மண்டபப்பணி செய்தவர்கள். அவர்கள் விளநகரிலும் இக்கல்வரிமண்டபம் கட்டியுள்ளார்கள் என்பதனை அறியலாம். இன்னும் விளநகரில் அறிய வேண்டிய கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. அவற்றைக் குருவருள் கூடும்போது கூட்டுவிக்குமாக.

முடிவுரை :

பன்னிரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ முத்துக்குமார தேசிகர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1827) ஸ்ரீ காசிவாசி சடையப்பத் தம்பிரான் சுவாமிகள் தருமை ஆதீனம் திருமஞ்சனவீதியில் உள்ள சச்சிதானந்த விநாயகர் ஆலயம் கட்டப்பட்டது. அதற்குப் பின்பு அவ்வாலயம் இவ்வாண்டில் கும்பாபிஷேகம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. திருப்பணியில் இவர்களுக்கு மிகவும் முன்னோடியாயிருந்த முனிபுங்கவர் ஸ்ரீ முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் கல்வெட்டுப் பற்றி ஆதீனக்கோயில்கள் அனைத்தும் ஆய்வு செய்து வெளியிடவும் குருவருள் அடியேனுக்குக் கூடுவதாகப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (10)

(கி. மு. 384-322)

(மலர் 48, இதழ் 3, பக்கம் 147 இன் தொடர்ச்சி.)

பல்துறை அறிவு :

அரிஸ்டாட்டில் ஏனைய பற்பல துறைகளிலும் அறிவு பெற்று விளங்கினர். மனோத்தத்துவம், கவிதையியல் (Poetics), பௌதீகம், வானசாத்திரம் போன்ற துறைகளில் துறைபோகிய வித்தகராக அரிஸ்டாட்டில்திகழ்ந்தார். அறிவியல் துறைகளிலும் அளவையியல் துறையிலும் அவர் ஈடற்ற ஞானம் பெற்றிருந்தார் என்பது அவர்தம் நூல்கள் வாயிலாக நாம் அறியலாம்.

நான்கு ஏதுக்கள் :

அரிஸ்டாட்டில், ஏதுக்கருத்தைத் (Causal Concept) தம் நூல் ஆட்சியில் எங்கணும் விரிவாகக் கையண்டிருக்கிறர். அவ்வாட்சி நவீன அறிவியல் துறையில்தான் சாத்தியம் என்று அவர் கருதவில்லை. உலகியல் நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் அஃது உன்னதமாகத் திகழ்வதை அரிஸ்டாட்டில் மெத்த அறிந்திருந்தார். எந்த ஒரு நடைமுறையிலும் நான்கு ஏதுக்கள் அல்லது காரணங்கள் இருப்பதை அரிஸ்டாட்டில் கண்டறிந்து அறிவிக்கிறர். அவை பொருட்காரணம் (Material Cause), முறையான காரணம் (Formal Cause), கிறம்மிக்க காரணம் அல்லது இயக்கும் காரணம் (Efficient or Moving Cause) மற்றும் இறுதிக் காரணம் (Final Cause) ஆகியவற்றை அரிஸ்டாட்டில் ஆய்ந்தறிந்து வெளிப் படுத்துகிறர்.

அ. பொருட்காரணம் :

ஒரு பொருள் எப்பொருளால் ஆதாரமாக ஆக்கப்பட்டதோ, அதன் வடிவாக நிற்கிறதோ, அது பொருட்காரணம் (Material Cause) எனப்படுகிறது. அஃது ஒழுங்கற்ற காடு முரடான

வடிவிலே காணவும் படலாம். ஒருசிற்பத்திற்குப் பொருட்காரணம் கல்தான் – அது முதலில் காடு முரடாகத் தென்படுகிறது. பின் சிற்ப வடிவு பெற்றபின் சிறப்பான உருக்கொண்டு திகழ்கிறது. சிற்பத்திற்குப் பொருட்காரணம் கல்லே என்பது போதரும். மிலீஷியன் (Milesian) இயற்கைத் தத்துவஞானிகள் உலகத் தோற்றத்திற்குப் பலப்பல கோட்பாடுகளைப் பகுத்துக் கூறினர். சிலர் நீரினின்றே இந்த நேமி பிறந்ததென்றும், வேறுசிலர் தீயினின்றே இப்புவனம் தோன்றித் திகழ்ந்தது என்றும், மற்றும் சிலர் காற்றே புவித் தோற்றத்திற்குக் காரணம் ஆகும் என்றும் கூறிநின்றனர். இக்காரணத்தை அவர்கள் பொருளின் அடிப்படை (Material Substratum) என்று புரியக் கூறினர்.

ஆ. முறையான காரணம் :

முறையான காரணம் (The Formal Cause) என்பது ஒரு பொருள் ஆக்கப்பட்டு உருப்பெற்று நிற்கும்போது அது அடையப் பெற்று நிற்கும் காரணம் ஆகும். பொன்னால் ஒரு சிலம்பு ஆக்கப் பட்டதென்றால் அப்படி ஆகிநிற்கும் வடிவமே முறையான காரணம் எனமொழியப்படுகிறது. (It is that which the thing essentially is.)

இ. திறம்மிக்க காரணம் :

ஒரு பொருள் கருதப்பட்ட வடிவினை அடையக் காரணமாக இருக்கும் சாதனம். (Agent) திறம்மிக்ககாரணம் அல்லது இயங்கும் காரணம் (Efficient ar Moving Cause) எனப்படும். (It is that through which the thing is produced.) குயவன், சட்டியை உண்டாக்கச் சார்ந்து காரணமாக விளங்குகிறான். எனவே அவன் இயங்கும் காரணமாக இருக்கிறான் என எடுத்தோதுகிறார்.

ஈ. இறுதிக் காரணம் :

எது கருதப்பட்டதோ அது முடிந்த நிலையில் அமையக்கிடப்பது இறுதிக் காரணம் (Final Cause) ஆகும். சிற்பக்கல்லை எடுத்துக் கொண்டால், அது விக்கிரமாக நிற்கும் நிலையே இறுதிக்காரணம் எனக்கொள்ளலாம்.

தற்காலத்தில் வடிவு எடுத்துள்ள தருக்க சாத்திரத்திற்கு அரிஸ்டாட்டில் ஆய்வு அடிப்படையாக அமைகிறார் என்றால் அஃது ஒன்றும் மிகையாகாது.

அரிஸ்டாட்டிலின் மேதகைமையும் அவரது தாக்கமும் :

'அறியும் ஆற்றல் உடையவருக்கெல்லாம் அரிஸ்டாட்டில் ஆசானாக விளங்குகிறார்' என்றால் அது பொய்மையாகாது - மெய்யே. (Master of those who know) அரிஸ்டாட்டில் தத்துவ உலகிலே தனியொரு நிலையை வகிக்கிறார். அவரது கல்வி ஆற்றலின் அகலத்திலேயோ, அன்றி சுயத்தன்மையிலோ அல்லது செல்வாக்கிலோ அவர் அற்புதமான அந்தஸ்திற்கு உரியவராவார். அவரை மீமிசைச்சொற்கொண்டு அனைவரும் பாராட்டி ஆராதிக்கின்றனர் என்றே கூறலாம். அரிஸ்டாட்டிலைத் தவிர அவனியில் எவரும் தனி ஒரு மனிதன் தம் சிந்தனைத் திறத்தாலே இத்தனைத் துறைகளில் சிறந்தோங்கியது கிடையாது என்றே கூறலாம். அரிஸ்டாட்டிலின் தாக்கம் அறிவியல் கூறுகள் அனைத்தையும் தழுவி நிற்கிறது. அளவியல், கணிதம், பௌதிகம், உயிரியல், மனோதத்துவம், நீதிசாத்திரம், அரசியல் அறிவு, அழகியல், மற்றும் தத்துவஞானம், வானசாத்திரம் போன்ற பற்பல துறைகளிலும் அளாவி நிற்பது கண்கூடு. அவரது தத்துவம் வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக நிலவவில்லை - அவரிடம் சுயஆக்க ஒருமை நிலையை ஒழுங்காகக் காணலாம். அரிஸ்டாட்டிலின் அற்புத மேதமை எதிலிருக்கிறது தெரியுமா? அளவற்ற அறிவுத் தொகையை ஒற்றுமைப்படுத்தி உன்னதமாக இணைப்பதில் அவரது ஆற்றல் நன்குவெளிப்படுகிறது. பிற்காலத்தில் பிறக்கப்போகிற தத்துவ சாத்திர விரிவு அனைத்தும் அரிஸ்டாட்டில் செய்த அடித்தளத்தை மையமாகக் கொண்டே அமைவதை நன்றாகக் கண்டுமகிழலாம். அரிஸ்டாட்டிலின் தத்துவத் தாக்கமானது மத்திய காலத்தில் மகத்துவமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நவீனயுகத்தில் தோன்றிய ஸ்பினோஸா (Spinoza) காண்ட் (Kant), ஹெஜல் (Hegel) போன்ற தத்துவமேதைகள் விரித்த தத்துவம் அரிஸ்டாட்டிலின் போதனையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முடிவுரை :

அரிஸ்டாட்டில், சிந்தனை வரலாற்றிலே ஒரு சீரிய பாத்திரமாவார். அவருடைய அருமைப் பனுவல்கள் அண்ட்ரானிகஸ் (Andronicus) என்பவரால் கி. மு. 60-50 வாக்கில் பதிப்பிக்கப் பெற்றன. அவர் குறிப்பின்படி அரிஸ்டாட்டில் ஆக்கித்தந்த நூல்கள் ஆயிரம் இருக்கும் எனப்புலனாகிறது. அவரால் பதிபிக்கப்பட்ட நூல்களில் பகுதிகள் மட்டுமே நம்கைக்குக்கிடைக்கின்றன. இப்பொழுது கிடைக்கும் அவரது நூல்கள் நூல்களாக வெளியிட எழுதப் பட்டவை அல்ல; அவை அனைத்தும் மாணவர் களுக்குப் போதிக்கப் பாடமாகவோ அன்றிச் சொற்பொழிவுகளாகவோ வழங்கப்பட்டவற்றின் குறிப்புக்களே ஆகும்.

அவரது நூல்கள் ஏழுவகையாகப் பிரித்து அமைக்கப் பட்டுள்ளன.

முதலில் தருக்க சாத்திரம். ஆர்கனன் (Organon) என்றநூலில் அளவையியல் பேசப்படுகிறது. இந்நூலில் இவ்வியல் மூன்று பகுதிகளாக விரித்துரைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இயற்கை அறிவியல்கள், பௌதிகம், வானியல், தோற்றமும் அழிவும், கோளியல், உலகத்தோற்றம், தாவரஇயல், விலங்குகளின் வரலாறு, விலங்குகளின் அங்கங்கள் பற்றி, விலங்குகளின் தோற்றம் பற்றி, விலங்குகளின் இயக்கம் பற்றி என்ற தலைப்புக்களின்கீழ் அரிஸ்டாட்டில் அமைத்துத் தந்திருக்கிறார்.

மூன்றாவது மனோதத்துவம்; ஐந்து தலைப்பின்கீழ் இந்த ஆன்ம சாத்திரம் அழகுற அமைக்கப் பெற்றுள்ளது.

நான்காவது தத்துவ சாத்திரம் இத்தலைப்பில் அரிஸ்டாட்டில் பதினொன்கு பகுதிகளாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவது நீதிசாத்திரம் இப்பொருள் பற்றி அரிஸ்டாட்டில் நிகோமேச்சியன் நீதிசாத்திரம் (Nicomachean Ethics) என்றும், யூடிமியன் நீதி சாத்திரம் (Eudemian Ethics) என்றும், மேம்பட்ட நீதி சாத்திரம் (Magna Moralia) என்றும் மூன்று தொகுதியாக அளித்திருக்கிறார்.

ஆறாவது அரசியல் இப்பொருள் பற்றி அரிஸ்டாட்டில் இரு நூல்கள் வழங்கியுள்ளார். அரசியல் (Polities) என்பதும், ஏதென்ஸின் அரசியல் சட்டம் (On the constitution of Athens) என்பதும் அரசியல் சாத்திரத்தின் நுட்பங்களை அறிவிப்பனவாகும்.

ஏழாவதுசொற்பொழிவுசாத்திரம். இத்துறைபற்றி (Rhetoric) அரிஸ்டாட்டில் இரு நூல் வழங்கியுள்ளார். இத்தலைப்பில் செய்யுளியல் (Poetics) பற்றியும் குறிப்பு காணப்படுகிறது.

அரிஸ்டாட்டில் ஒரு ஞானசாகரம் - விஞ்ஞான வித்தகர் - அறிவியல் துறையின் அளப்பரும் ஆய்வாளர் - தத்துவத்துறையில் ஒரு தனிப்பெரும் கடல். இவர் போன்ற ஞானியர் பல நூற்றாண்டுகட்கு ஒரு முறையே தோன்றுகின்றனர். இவரது தத்துவமேன்மை, வள்ளுவரோடும், மெய்கண்டாரோடும், அருணந்தியாரோடும், உமாபதியாரோடும் ஒப்பிட்டு ஆயத்தக்கதாகும்.

அரிஸ்டாட்டில் பற்றிய கட்டுரைகளில் இஃது இறுதியானது. கால வரிசைப்படி, காணத்தக்க அடுத்த தத்துவ மேதை எபிக்யூரஸ் (Epicurus) என்ற கிரேக்க தத்துவஞானி ஆவார்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

கவிதைக் கடிதம்

M. GOPALAN, M. A., Madras - 10,
Deputy Secretary To Government (Retd) 20-2-89.

தருமபுரத்தில் அருளாட்சி செய்யும் தவத்தரசே
பெருமை யனைத்தும் மிடியே னுரைத்திடும் பெற்றியதோ
இருமை வினை தெரிந் தீண்டறம் பூண்பார் எடுத்தியப்பும்
அருமை யனைத்தும் அடியே னுளங்கொண் டறிதவனே. (1)
மாலற நேயம் மலித்தவர் வேடமும் மண்ணுலகில்
ஆலயம் தானும் அரனெனக் கூறும் அருஞ்சமய
நூலதன் பாவின் பொருளதாய் நிற்கும் நுமதுதிருக்
கோலம தென்கண் குளிர்த்திடக் காணக் கொடுத்தனையே. (2)

வேறு

வீங்குபுகழ்ச் சைவமொடு தீந்தமிழும் கொழித்துமிக விளங்கச் [செய்தே
ஓங்குபுகழ்த் தருமபுரத் திருமடத்தில் அரளரசு புரிந்தி லங்கும்
தேங்குபுகழ்த் திருக்கயிலைச் சண்முகதே சிகஞானத் தேவே என்னை
ஏங்கொலிநீர் சூழ்வையத் தினிப்பிறவா வழியருள இறைஞ்சு [வேனே. (3)

வேறு

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்
மெய்யாக நான்கவற்றுள் மேல்வினையால் — எய்யாமல்
காக்கும் குருவருளென் பாரேழை பாலதனைச்
சேர்க்கும் திருவுளமோ செப்பு. (4)

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

தருமபுரம்.

முன்னுரை :

என்று முள தென்தமிழ் இயம்பி இசை கொண்ட கம்பர் சிந்தாமணிக் கடலில் முகந்து கொண்ட முத்துக்கள் பல. விருத்தப்பாவில் காவியம் அமைய வழிகாட்டிய திருத்தக்கதேவரை அப்படியே பின்பற்றினர் கம்பர். முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றுதல் மரபுதானே.

கடவுள் வாழ்த்தின்பின் அவனருள் என்றே நம்புகின்ற வான் சிறப்பும்; அம்மழையால் நிலைபெறும் ஒழுக்கம் அறம் என்ற பண்புகளை, ஆற்றுவளமென்றும் நாட்டுச் சிறப்பு நகரச்சிறப்பு என்றும் வள்ளுவரைப் பின்பற்றிச் சிந்தாமணி பாடியது. அதனை நல்ல முன்மாதிரியாக் கொண்டார் கம்பர். தேவரை வருணனை உத்தியில் பின்தொடரும் கம்பர் பின்னும் அதனைத் தம் பாட்டுத் திறத்தாலே பொலிவுறுத்துகிறார். சொல்லாட்சிகளும், கற்பனை அமைப்புக்களுங்கூட அப்படியே. பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல் இதற்கும் ஏற்றது என்னுமாப்போலே தேவரின் ஆட்சிகளை நேர்மாறானவற்றில் பொருத்திக் காட்டித் தம்புலமை நலங் காட்டுவார்.

இப்படிப் பல்வேறு சிந்தனைகளை இத்தொடர் தாவிருப்பதால் அந்நல் முத்துக்களைத் தமிழன்னைக்கு ஆரமாக்கும் முயற்சி இங்கே தொடங்கப் பெறுகிறது.

கடவுள் வாழ்த்து :

ஆக்கி - காத்து - அழிக்கும் ஆற்றலுடைச்சக்தி நம்மினும் உயர்ந்தது. அதனால் அதனை ஏத்துதல் உலகின் (உயிர்க்கிழவன்) கடனாகும். அதனாலேயே அதனைத் தலைமையாகவும் கொள்கிறோம்.

மூவா முதலா உலகம்மொரு மூன்று மேத்த
தவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே. (சிந். 1)

ஈற்றடி அமைப்பை அப்படியே கம்பர் அமைத்துக் கொண்டு அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர் - அவர்க்கே சரண் நாங்களே என்றார். தேவாதி தேவன் எவனோ அவன் சேவடி சேர - தேவர் கூறியதுபோல விளையாட்டுடையார் எவரோ அவர் தலைவர் என்று-கம்பரும் அதே அமைப்பைக் கையாள்வது நோக்கற்குரியது. (சிந்தாமணி, இராமாயணப் பாடல் எண்கள் தொடர் எண்கள்.)

தூயோரைத் தொழல் :

வினையின் நீங்கி விளங்கிய அறிவனைத் தொழுது அதனால் வினைநீக்கம் பெற்ற தூயோர்களும் வழிபாட்டிற்குரியவர்களே. பன்மாண் குணங்கட்கிடனாகி, பகை நண் பொடில்லாத இறைமைக் குணத்தினை இவர்களும் சார்ந்து விடுவார்கள். தேவர் இத்தகைய சாதுக்கள் சரணம் என்றமை நினைந்து கம்பரும் ஞானிகளின் திருவடிகளைப் புகலாகக் கொள்கிறார். அவர்களைச் சேருவதால் தாங்களும் தூய்மையராகி உயர்ந்தபொருளை வகுத்துப் பேசத் தகுதி பெற்றவர்களாகி விடுவதை இருவர் பாடல்களும் காட்டுகின்றன.

பன்மாண் குணங்கட் கிடனாய்ப்பகை நண்பொ டில்லான்
தொன்மாண் பமைந்த புனைநல்லறந் துன்னி நின்ற
சொன்மாண் பமைந்த குழுவின்சரண் சென்று தொக்க
நன்மாண்பு பெற்றே னிதுநாட்டுதன் மாண்பு பெற்றேன்.

(சிந். 3)

குழு என்று ஆசிரிய உபாத்தியாய சாதுக்கள் என்போரை நினைவு படுத்துகிறார். (உ. வே. சா).

சிற்குணத்தர் தெரிவு அரு நல்நிலை
எற்கு உணர்த்தரிது எண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவரே முதலோர் அவர்
நற்கு ணக்கடல் ஆடுதல் நன்றரோ. (கப். 2)

எண்ணுகின்ற குணம் மூன்றனுள் முதலாம் குணம் (முற்குணம் கொண்டோர்) சத்துவகுணம் நிறைந்தவர். பகையும் நண்பும் இல்லாத நிலை அறிவு நிலையே. ஆதலால் சித்குணத்தவர் என்றார். சிந்தாமணி வரியைச் சுருங்கச் சொல்லிக் கம்பர் விளக்கினர்.

அருஞ்சுரத்தின்மரம்போல அடைந்தார்க்களித்தல் இறைநிலை. அதுதான் அவனை நண்ணினர்க்கு நல்லனுக்கியது.

நிழலில் நீளிடைத் தனிமரம் போல
பணைகெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே. (புறம். 119)

அழல் மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கு எல்லாம்
நிழல் மரம் போல் நேரொப்பத் தாங்கல்—நல்லாண்

மகற்குக் கடன் (நாலடி. 202) என்று பிறநூல்களில் அந்நிலை விரித்துரைக்கப்படும். அவர்களை உள்ளவாறு கூறுதல் எனக் கரிது என்றாலும் அவர் நற்குணக் கடல் ஆடுதல் நன்று - என்று தேவர் வழியில் நடையிடுகிறார் கம்பர்.

எதிர்மறைச் சிந்தனை :

பகைநண்போடில்லாதவன் அவைகளாக இருக்கும் விந்தையை இன்னொரு இடத்தில் கம்பர்காட்டினார். வாலி இராமனைத் துதிக்கும் போது 'பாவம் நீ, தருமம் நீ, பகையும் நீ, உறவும் நீ' - என்கிறான். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் இறைவனே என்றால் பகையாக இருப்பவனும் உறவாக இருப்பவனும் இறைவன் தானே என்ற கருத்து இங்குச் சுட்டப்படுகிறது.

உறவு - பகை என்ற எண்ணங்களை உண்டாக்குபவனும் இறைவன்தான் என்றதால் உபசாரமாக இவ்வமைப்பைக் கொள்ளவும் கூடும். சிந்தாமணிக் கருத்து - எதிர்முகமாகி - கம்பர் வாக்கில் எழுச்சி அதிகம் பெறுகிறது என்பது மட்டும் உண்மை.

(வளரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadavoor

திருக்கடையூர் ஐயனின் அன்பும் அருளும் பெற்று அபிராமியின் கடைக்கண் அருளால் அனைவரும் இன்பமுற என்ன ஒருபேறு செய்திருத்தல் வேண்டும்! அதுவன்றோ இன்று பெற்றோம்.

(ஒ-ம்) ச. மோகன்

4—3 —89 High Court Cheif Justise (Incharge)

கழறிற்றறிவார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 5—2—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

முதல் ஞாயிறு! அருளுபதேச இனிய நாள் அது! காலை 9-15 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். எழில் கொஞ்சும் வண்ண விமானங்களோடு கும்பாபிஷேகம் நிறைந்து விளங்கிய வடக்குக் குருமூர்த்தங்கள் அடியேன் மனத்தில் பக்திப்பரவசம் ஊட்டின! சென்றேன்! வணங்கினேன்! ஒரே நேரத்தில் - 16 திருக்கோயில்கட்குக் கும்பாபிஷேகம்! அம்மம்ம! இறையருளும் குருவருளும் எப்படியெல்லாம் நம்மை ஆட்கொள்கின்றன!

வியந்தவாறே திருமடம் சென்றேன்! குருமணிகள் பூசை நிறைவித்துச் சித்திராசனத்தில் இருந்தார்கள். அன்பர்கள் திருநீறு பெற்றணிந்து அமர்ந்தனர். திருமுறைப் பாராயணத்தையடுத்துக் குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள்.

மாதச்சிறப்புத் திருநாட்கள் பற்றி முதற்கண் அருளினார்கள். திருஇராமேச்சரம் பணிந்த சுந்தரர் அங்கிருந்தபடியே ஈழநாட்டுத் தலமாகிய திருக்கேதீச்சுரத்தை மனத்தால் நினைத்துத் தொழுது திருப்பதிகம் பாடினார் என்பது வரை சென்ற மாதம் அருளப் பெற்றது. பலதலங்களையும் வணங்கித் திருச்சுழியல் சென்று வழிபட்டமை முதலாக இம்மாதம் உபதேசித்தருளினார்கள்.

திருச்சுழியல் தலத்தினை அடைந்தார் சுந்தரர். பிறவிச்சுழியில் வீழாமல் தம்மைக் காக்குமாறு வேண்டினார். "ஊனாய் உயிர் புகலாய்" எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடினார்; "திருச்சுழியல் நானுவிதம் நினைவார்தமை நலியார் நமன்தமரே" என அருளி வழிபட்டார். அவ்வூரிலே இரவில் தங்கினார். சுந்தரர் கனவில் இறைவன் காளை வடிவம் கொண்டு தோன்றினார். "நாம்இருப்பது கானப்பேர்" என்றார்; மறைந்தார். சுந்தரர் உடனே துயிலுணர்ந்தார். பெருமான் திருவருள் திறம் வியந்தார்; தாம் கண்ட கனவினைச் சேரமானார்க்கு உரைத்தார். திருச்சுழியற் பெருமானை

வணங்கி விடைகொண்டார்; திருக்கானப்பேர் என்னும் பதியினைச் சாரலுற்றார். பதியினைச் அடையச் செல்லும் வழியில் "தொண்டரடித் தொழலும்" என்று தொடங்கிக் "கண்டு தொழப் பெறுவது என்றுகொலோ, அடியேன், கானப்பேருறைகாளையையே" என்று நிறையும் பதிகத்தினைப் பாடியவாறே சென்றார். திருக் கானப்பேர் (காளையார் கோயில்) அடைந்தார். திருக்கோயிலை வலம் வந்து வணங்கினர். சுந்தரரும்சேரமானரும் அங்குச் சின்னள் தங்கியிருந்தனர் குருமணிகள், ஞானசம்பந்தர் திருஇடைமருதூர்த் தலத்திற்குச் செல்லும்கால் அதனை நினைந்து வழியிடையே "இடைமருது ஈதோ" — எனப்பாடியதையும் ஞானசம்பந்தர் திருமயிலையில் பூம்பாவையை எழுப்பியபின், சிதம்பரம் தரிசித்து, சீகாழி மீளுங்கால், சீகாழிப் பதியைத் தூரத்தே கண்டு "வண்டார் குழல்" என்று தொடங்கிப் பதிகம் பாடி "வேணுபுரம் அதுவே" எனப்பாடியருளியதையும் இவைபோன்ற பதிகங்கள்சிலவற்றையும் உணர்த்தியமை மிகச் சீரிய ஒப்பீட்டாய்வாக அமைந்து மகிழ்வித்தது.

திருச்சுழியலிலிருந்து சேரமானரும் சுந்தரரும் திருப்புனவாயில் அடைந்தனர். சுந்தரர் 'சித்தம் நீ நினை என்னோடு" என்று தொடங்கும் திருப்பதிகம்பாடி நிலமுற விழுந்து பணிந்தார்.

" சித்தம் நீநினை என் னோடு சூளறு வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளனூர்
பத்தர் தாம்பலர் பாடிநின்று ஆடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்டருப் புனவாயிலே "

என்பது இப்பதிக முதல்பாடல்; இப்பாடல் பொருளை விளக்கினர்கள். இறைவனை நினைதலால் பயன் உண்டு என்பதை விளக்குவது இது. "சூள் அறு", "உறுதியாகப் பயன் உண்டு" - என மனத்திற்குச் சொல்வதாக அமைந்தது. மேலும் இப்பாடலில் புனவாயிலில் மரப் பொந்துகளில் ஆந்தைகளின் பாட்டு அருமல் விளங்குகின்றது என்று கூறப்பட்டுள்ளது. சோலைகள் சூழ்ந்துள்ளமையால் பகல் இரவு ஆயிற்று. எனவே ஆந்தை ஒலி இடையருது இருந்தது என உரைவிளக்கம் அருளியமை சிறப்பாக இருந்தது. அங்கிருந்த வாறே திருக்கோயில்கள் பலவற்றையும் வணங்கினர்; குன்று களையும் காடுகளையும் கடந்து சோழநாடு சேர்ந்தனர்.

சோழநாட்டில் திருப்பாதாளீச்சரம் அடைந்தனர். இடை வழியிலுள்ள பலதலங்களையும் தரிசித்தனர். மிகவிரைவில் திருவாரூர் அடைந்தனர். மக்கள் எதிர்கொண்டனர். சுந்தரரும் சேரமானரும் முதலில் திருக்கோயில் சென்றனர். குருமணிகள் இப் பகுதியைக் குறிப்பிடும்போது ஞானசம்பந்தரும் முதலில் திருக்

கோயில் சென்ற பின்பே, திருமாளிகை சென்றதாக வரலாறு காட்டுகிறது. ஞானசம்பந்தர் காட்டிய இந்நெறியையே சுந்தரரும் பின்பற்றினார் என ஒப்பீடு அருளி அருளாளர் வாழ்வியல் நெறி உணர்த்தி நெறிப்படுத்தினார்கள்.

சுந்தரர் ஆரூர்ப் பெருமானை வழிபட்டுச் சேரமானார் மற்றும் பரிவாரங்களுடன் பரவையார் மாளிகைக்குச் சென்றார். பரவையார் முகமன் கூறி வரவேற்றார்; உரிய முறையில் திருவமுதும் செய்வித்தார். சுந்தரரும் சேரமானும் பூசாகாலங்கள் தோறும் ஆரூர்த் தியாகேசரை வழிபாடு செய்தனர்.

சுந்தரரும் சேரமானாரும் ஆரூரில் பன்னாள் மகிழ்ந்திருந்தனர். இங்ஙனம் இருக்கும் நாளில் 'சேரநாட்டுக்கு எழுந்தருளுமாறு சுந்தரரைச் சேரமானார் இரவும் பகலும் தொழுது பலகாலும் வேண்டினார். சுந்தரர் பரவையார் இசைவு பெற்றார்; இசைந்தார். சேரநாடு புறப்படுமுன் சேரமானார் ஆரூர் அடியார்கட்குப் பூசனை நிகழ்த்தினார். இருவரும் பூங்கோயில் பெருமானைத் தொழுது விடைகொண்டனர். மலைநாடு நோக்கிப் புறப்பட்டனர்.

காவிரித் தென்கரை வழியே சென்றனர். திருக்கோயில்கள் பல தொழுதனர். திருக்கண்டியூர் அடைந்து வழிபட்டு வெளி வந்தனர். அப்போது காவிரியின் வடகரையில் திருஐயாறு எதிர் தோன்றிற்று. வழிபட எண்ணினர். சுந்தரரிடம் சேரமானார் ஐயாறு வழிபட எண்ணும் தம் விருப்பத்தினைப் புலப்படுத்தினார். காவிரியின் இருகரைகளிலும் நிரம்பியவாறு வெள்ளம் பெருகி ஓடிற்று! ஓடங்களும் அக்கரைக்குச் செல்லாத நிலை அப்போது! சுந்தரர் இறையடி நினைந்தார். "பரவும்பரிசு ஒன்று அறியேன்நான்" என்று தொடங்கிப் பதிகம் பாடினார். அப்போது சிவபெருமான், கன்று தடைப்பட்டு எதிரே நின்று கூப்பிட, கதறிக் கனைக்கும் தாய்ப்பசுப் போலச் சராசரங்கள் அனைத்தும் கேட்க "ஓலம்" என்று கூறினார். இதனை நினைப்பிக்கும் வகையில் 'ஓலமிட்ட விநாயகர்' சந்நிதி அத்தலத்தில் உள்ளமையைச் சுட்டினார்கள். இறையருளால் காவிரி, இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. அடியார்களும் சேரமானும் சுந்தரரும் காவிரிநீர் மேற்புறத்தே தங்கி நிற்கக் கிழக்குப்பகுதியில் அமைந்த மணல் வழியில் சென்று தென்திருக் கயிலாயத் திருக்கோயில் சார்ந்தனர். ஐயாறப்பரைப் பணிந்தனர். அறம்வளர்த்த நாயகியைப் போற்றினர்.

முன்வந்த வழியே மீண்டும் தென்கரை சார்ந்தனர்; காவிரி முன்போலவே வெள்ளம் பெருக்கு எடுத்து ஓடியது. அதனைக்கண்டு பஞ்சநதீசுவரரை நினைந்து பணிந்தனர் மேற்றிசை நோக்கிச் சென்றனர். பலபதிகளை வணங்கினர். கொங்கு நாட்டின் வழியாக மலைநாடு சார்ந்தனர்.

மலைநாட்டு மக்கள் எதிர்கொண்டு வரவேற்றனர். நம்பி ஆரூரரும் சேரமானும் கொடுங்கோளூர் அடைந்தனர். அடியார்கள் கொடுங்கோளூரில் சுந்தரரை மிக்க சிறப்புடன் வரவேற்றனர். சேரமானார் சுந்தரருடன் நேராகத் தம் திருமாளிகை செல்லாமல் திருவஞ்சைக்களம் திருக்கோயிலுக்குச் சென்றார். இருவரும் இறைவனை நிலமுறப் பணிந்து தொழுதனர். சுந்தரர் அஞ்சைக்களத்து அப்பரை "முடிப்பது கங்கை" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர். சேரமானும் சுந்தரரும் திருக்கோயில்புறம் போந்தனர்.

சேரமானார், அலங்கரிக்கப்பட்ட யானைமேல் சுந்தரரை அமர்வித்தார். பின் தாமும் ஏறினர். இருகரங்களாலும் வெண் சாமரம் வீசினர்; "சேரமானார் சுந்தரருக்குக் கவரி வீசினர். இது போன்றே தெய்வத் தமிழ்ச் சான்றோராம் சேக்கிழார்க்குச் சோழன் இரண்டாம் குலோத்துங்கன் கவரிவீசிச் சிறப்புச் செய்தான்" என இடையே வரலாற்று ஒப்பீடு அருளியமை மனமகிழ்வு தந்தது. மாளிகை நோக்கிவந்தார். வழியிடையில் மக்கள் கண்டு வணங்கிப் போற்றி மகிழ்ந்தனர்.

திருமாளிகையின் வாயிலில் யானையினின்று இறங்கினர்; மாளிகை புகுந்தனர்; சேரமானார் சுந்தரரை அழைத்துச் சென்றார். அரியணையில் அமர்வித்தார்; அவர் முன்னே நின்றார். தேவியர் மணமிக்க நீர்கொணர்ந்து வார்க்கச் சுந்தரர் திருவடிகளைச் சேரமானார் விளக்கத் தொடங்கினர். சுந்தரர் "இது தகாது" என மொழிந்தார். தோழர் ஆனமையால் இங்ஙனம் கூறினர். சேரமானார் சுந்தரர் திருவடி தொழுது "எம்பெற்றிமையால் செய்தன இங்கு எல்லாம் இசையவேண்டும்" என வேண்டினர். சுந்தரர் மறுக்க லாற்றாது இசைந்தார். சேரமானார் பாதபூஜைசெய்தார். சேரலரும் சுந்தரரும் ஒருசேரத் திருவமுது செய்தனர். கலவைச் சார்ந்து, சந்தனம், இரத்தினாபரணங்கள், பீதாம்பரம் முதலியனவற்றைச் சுந்தரருக்குச் சாத்தினர். இருவரும் மகிழ்ந்து இறையடி தொழுது இருந்தனர்.

பன்னாட் சென்றபின் சுந்தரருக்குத் திருவாரூர்ப் பெருமான் நினைவு மிகுந்தது. ஆற்றாதவரானார். "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினர். "என் ஆவியை ஆரூரானை மறக்கலும் ஆமே" என நெகிழ்ந்தார். திருவாரூர் செல்ல எண்ணினர். தொண்டர்களுடன் புறப்படத் துணிந்தார். அதுகண்ட சேரமானார் நட்புக்காரணமாக மனம் உருகிப் பதைத்தார். பிரிவு ஆற்றாதவரானார். நம்பியாரூரர் தேற்றினர்; " மதியணிந்தார் இன்னருளால் அரசளிப்பீர்!

நீர் இருப்பீர்" என மொழிந்தார். சேரமானுர் சுந்தரர் மொழிக்கு இசைந்தார். மிகப்பலவாகும் நிறைந்த பொருள்களைக் கொணர்வித்தார். வன்றொண்டர்க்கு அவற்றை உரிமையாக்கினுர். அவற்றைச் சுமையாட்கள் மூலம் முன்னே செல்லவிடுத்தார். பின்னர்ச் சுந்தரர் சேரமானைத் தழுவி விடை கொண்டார்.

சுரங்களையும் ஆறுகளையும் பிறவற்றையும் கடந்து திருமுருகன் பூண்டி அருகே சுந்தரர் செல்லும்போது சிவனருளால் சிவபூதங்கள் வேடுவர்களாக எதிர்வந்தன, நம்பிகளிடம் சேரமானுர் அளித்த பொருள்களை வேடுவர் கவர்ந்தனர். சுந்தரரிடம் சுமையாட்கள் இதனைத் தெரிவித்தனர் சுந்தரர் திருமுருகன்பூண்டித் திருக்கோயில் அடைந்தார். "வேடுவர்கள் வழிபறிக்கும் இக்காட்டில் எத்துக்கு இங்கு இருந்தீர்" என்று கருத்துடன் இரக்க உணர்வு மேலோங்கக் "கொடுகு வெஞ்சிலை" எனத் தொடங்கும் பதிகம் பாடினுர். "வேடுவர் கூறைகொள்ளும் இவ்விடத்தே மாது தபமொடும் இருக்கின்றீரே" - எனவும் எங்கும் செல்ல வாகனமாக ஒன்றும் இல்லாதவரானுல் பரவாயில்லை; உமக்கோ இடபம் வாகனமாக உள்ளது; இடபமேறிச் செல்லாமல் எதற்காக இங்கு இருக்க வேண்டும்? எனவும் இரக்கம் தோன்றப் பாடினுர்; மேலும் இப் பதிகப் பாடல்களில் "எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானிரே" என்ற நிறைவுத் தொடரைக் குறிப்பிட்டு "எம்பிரானீரே" எனப் பாடம் அமைதலே சிறக்கும் என அருளித் தருமை ஆதீனப் பதிப்பில் இங்ஙனம் அமைந்திருத்தலைச் சுட்டியமை நெறிகாட்டுவதாக அமைந்தது. சுந்தரர் பதிகம் பாடியமை கேட்ட பெருமான் மகிழ்ந்தான். உடனே திருவருளால் வேடுவர்கள் கோயில் வாயிலில் தாம்பறித்த பொருள்களைக் கொணர்ந்து சேர்த்தனர். சுந்தரர் கண்டு மகிழ்ந்து துதித்தார். சுமையாட்களிடம் எடுத்துச் செல்ல ஆணையிட்டார். பின்னர்க் கொங்குநாடு நீங்கித் திருவாரூர் சேர்ந்தார் - என்பது வரை வரலாறும் பதிகப் பாடல் நயமும் விளக்கி இனிய அருளுபதேசம் வழங்கினுர்கள். சுந்தரர் வரலாறு திருமலைச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காமர் புராணம், கழறிற்றறிவார் புராணம் எனத் தொடர்ந்து வந்தவாற்றை விளக்கிச் சுந்தரர் கயிலைச்சேரல் வெள்ளானைச் சருக்கத்தில் நிறைவுறுவதைத் தெளிவித்தார்கள்.

அருளுபதேசம் நிறைந்தது! இன்சுவைக் கனிச்சாறு பருகி இனிய சிந்தனைகளோடு இல்லம் ஏகினேம்!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு விபவ ஆண்டு மாசித் திங்கள் 8 ஆம் நாள் (19—2—89) ஞாயிற்றுக்கிழமையன்று கங்கைகொண்டசோழபுரம் ஸ்ரீ பிரகதீசுவரசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. இத்தலம் கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாப் பதிகம் பெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பக்தர்கள் ஆலய வழிபாட்டில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 93 ஆவது அருளுபதேசம் 5—3—1989 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது.

முதலில் தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சிநிறுவன கௌரவ இயக்குநர் திரு. தி ந. இராமச்சந்திரன் 'பெரிய புராணம்' நூற்பெயர் அமைப்புப் பற்றியும் அடியார்கள் பத்திமை மாண்பு பற்றியும் கருத்துரை வழங்கினார். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக, கணநாதர் வரலாற்றில் அமைந்த சைவசித்தாந்தக் கோட்பாடுகளை நன்கு விளக்கியருளினார்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளை உலகியல், சமய இயல் நெறிகளை எடுத்துக்காட்டிப் புலப்படுத்தினார்கள்.

தருமை ஆதீன அடியார்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் முதலியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்து 94 ஆம் அருளுபதேசம் 2—4—89 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக.

திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 18—2—89 முதல் 22—2—89 வரை நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோளிலிப்பெருமான் வீற்றிருத்தருளும் எம்பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர் கிழார் தந்தருளிய நெல் மலையைச் சுவாமிகள் ஆரூரருக்கு அட்டித் தருமாறு ஆளிட வேண்டிக்கொண்டவண்ணம் இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச் சென்றமை முதலிய அற்புத வைபவங்கள் இம்மகோற்சவத்தில் நடைபெற்றன. 21—2—89 செவ்வாய் அன்று, நெல்மலையை ஆரூரருக்குச்சேர்ப்பிக்க இறைவன் கட்டளையிடும் உற்சவம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. பக்தர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதும் அட்டவீரட்டத் தலங்களில் காமனை எரித்த ஐதிகத் தலமும் ஆகிய திருக்குறுக்கை அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய அருள்மிகு வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—2—89 திங்களன்று மாசிமக ஏகதின உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீகாமதகனமூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. இரவு ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாக்காட்சி நடைபெற்றது. பக்தர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

திருபுவனத்தில் குருபூஜை விழா

தருமை ஆதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா 24—2—89 வெள்ளிக்கிழமையன்று திருபுவனம் சந்நிதிவீதியிலுள்ள குருமூர்த்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. நண்பகல் மாகேசுவர பூஜை நிகழ்ந்தது. மாலை 7மணி அளவில் தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., 'குருவழிபாடு' என்னும் பொருளில் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் குருவழிபாடு ஆற்றியும் சொற்பொழிவு கேட்டும் பயன் பெற்றனர்.

தருமபுரம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகம்

திருவிளக்கு வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி துணைக்கொண்டு தருமபுரத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம் தொடங்கப்பெற்று வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 மணிக்கு வாரவழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தைமாதம் கடை வெள்ளிக்கிழமை நாளில் 10—2—89 அன்று மாலை 6-30 மணி அளவில் இவ்வழிபாட்டுக் கழகத்தின் சார்பில் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் 108 திருவிளக்கு வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. தருமபுரம் மற்றும் இதனைச் சார்ந்துள்ள பகுதிகளில் வாழும் பெண்கள் இதில் கலந்துகொண்டு பக்தி சிரத்தையோடு திருவிளக்குப் பூஜை நிகழ்த்தினர். தீபாராதனையின்போது திருத்தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில எழுந்தருளி வழிபாடாற்றி அருட்பிரசாதம் வழங்கினார்கள். பக்தர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி

ஆண்டு விளையாட்டுவிழா, இலக்கியமன்ற விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விளையாட்டுவிழா, இலக்கியமன்ற ஆண்டுவிழா 1—3—89 புதன்கிழமையன்று தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளாசி துணைக்கொண்டு சிறப்பாக நடைபெற்றது. காலை 8-00 மணி அளவில் பள்ளிச்செயலாளர் திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ., பி. எல்., கொடியேற்றி விழாவைத் துவக்கிவைத்தார்கள். அடுத்து மாணவ, மாணவியரின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

பிற்பகல் 4-30 மணி அளவில் பள்ளித் தலைமையாசிரியர் வரவேற்புரை ஆற்றினர். மயிலாடுதுறை சார்பு நீதிபதி திரு. ஆர். சிங்காரவேலு, பி. எஸ்சி., பி. எல்., அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பரிசுகள் வழங்கினார்கள். தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரிப் பேராசிரியர், டாக்டர் திரு. மு சிவச்சந்திரன், எம். ஏ., பிஎச். டி., பி. எட்., அவர்கள் இலக்கியம்ஏன் என்னும் தலைப்பில் உரையாற்றினர். பள்ளி ஆசிரியர் திரு. தெ. இராசாமணி, எம். ஏ., எம்.எட்., நன்றி கூறினர். நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவுற்றது.

நாட்டம் அதுவாய் நட

நடப்பது கூட நம் செயல் அன்று. உடம்பு ஒரு செயலைச் செய்கிறது. வாய்பேசுகிறது. மனம்நினைக்கிறது. மனமும் வாக்கும் காயமும் முறையே நினைத்தல், பேசுதல், செய்தல் என்பனவற்றை மேற்கொள்கின்றன.

முதல்வனாகிய கடவுளின் திருவருள் ஆன்மாவிற்குக் கண்ணைப் போல இருந்து அறிவிக்கும். இந்த இறை அருள் இயல்பினை மறவாதீர்! திருவருளே கணைகை - நாட்டமாக நடப்பீர் ஆக. திருவருட் செயல்களை நம் செயல் எனக் கருதுதல் ஆகாது.

" காண்பான் ஒளிஇருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விடும்? "

என்பது உமாபதிசிவம் அருளிய திருவாக்கு.

உலகத்தில் ஈதல் முதலிய யாது ஒன்றைச் செய்தாலும் 'சிவார்ப்பணம்' என்றுகருதிச் செய்வோமாக.

" ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித்து இருந்திடினும் — மாதேவன்
காட்டுவ தானஅருள் கண்ணைவிட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட "

என்பது ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு.

— குருதாசன்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam
Sri Vaidhyanathaswamy Devasthanam, Vaidheeswarankoil.

K. P. KANDASAMY M. A., 12 3—89,
Minister, HR & CE, Govt of Tamil Nadu.

I had the good opportunity of Dharshan at this temple and I had the rare fortune of direct blessing.

(ஒ-ம்) கே. பி. கந்தசாமி

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(விபவஹு பங்குனிமீ 1௳ முதல் 31௳ முடிய)

(14—3—89 முதல் 13—4—89 முடிய)

விபவஹு பங்குனிமீ 1௳ மங்கள வாரம் மிருகசீரிஷம் நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடிய காலத்தில் ரிஷபலக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரியபகவான் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாகப் பங்குனி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று ஷடசீதி புண்ணியகாலம். காரடையான் நோன்பு; பங்குனிமீ 25௳ சைத்திரசுத்த பிரதமை, சுக்கிர வாரம், சாந்திரமான வருஷாரம்பம். சங்கிரமண வருஷாதிபதி சுக்கிர பகவான் கலியுகம் 5090 சுக்கில வருஷத்திற்கு இராஜாவாக வருகின்றார். அவர் கலியுகம் 5090 இன் சுக்கில வருஷத்திற்கு சௌரமான வருஷாதிபதியாக வருகிற குருவை மந்திரியாக நியமித்துக்கொண்டு வானமண்டலத்தில் பூலோக ரட்சகராக ஆட்சி செலுத்துவார். அவர் நவநாயகரில் மற்றவர்களையும் ஏற்படுத்தி, பூலோக மாந்தர்களை சம்ரக்ஷிக்கும் கர்த்தாவாக ஆகிறார். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாக உலகில் வரும் ஆண்டில் சுபிட்ச சூசகமாக மக்களின் ஆக்கப்பிரவிருத்திகள் அதிகரிக்கும். மக்கள் சுயதேவைக்கும் பொருளாதாரத்துக்கும் அரசு வ்ழியில உழைப்பு மேற்கொண்டு நலமெய்துவர். இராஜா சுக்கிரனாகவும் மந்திரி குருவாகவும வருவதால் உலகத்தில் மன்னர்கள் ஜனாதிபதிகள் தம் ஆட்சியில் எல்லா சமூகத்தினரும் கலாசாரம் மதாசாரம்பேணி உயர்வெய்தும் பொருட்டு துலாக்கோலங்கராகச் செங்கோல் ஆட்சி புரிந்துவருவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவசொருப அவதார பரமாசாரியர்களாக வந்து திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலக சுபிட்சத்திற்கும் உலகம் செந்நெறியில் இயங்கவும் ஈஸ்வர பிரார்த்தனை செய்து செல்வர்கள், சிவநேயர்கள், பக்த கோடிகளுக்கெல்லாம் அருள் பிரசாதம் வழங்குவர். வேதசாஸ்திர கல்விச் சாலைகள் நிறுவி வித்தியாதானம் செய்விப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் உற்சவங்கள்

புண்ணிய சீலர்களின் புனித சேவையில் விமரிசையுடன் நடக்கும். பிரஜைகள் ஈஸ்வரனைத் தரிசித்து மனம் தெளிந்து மகிழ்வர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் கெடியான கோரணைக்கு ஏற்பவரும். தீர்க்கமாக உறுதி வாக்களிக்கும். ஞான உரையாடல், மதிப்பு உயர்தல் ஆகும். தெய்வஸ்தலம் செல்லுதல், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் மகிழ்ச்சியாகும். அவசியமாக உள்ள எல்லா நற்காரியங்களும் தெய்வபலனால் வெற்றியாகநடந்துவரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மார்ச்சு 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் நற்பலனும் உயர்ஸ்திதியும் ஏற்படும். மார்ச்சு 18- ஆனல் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வருதல் நான்குவகை பணவரவுகள்வருதல் ஆகும். எல்லாக்காரியங்களும் தெய்வ பலனால் நல்லவிதமாக நடந்துவரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் அரசாங்க கௌரவம் தரும். பரோபகார தான தருமங்களை செய்யும். நான்கு வகை பிரவிருத்திகளை உண்டு பண்ணும். புத்திரர் புத்திரிக்குச் சுபம் நிகழும். எல்லாக்காரியங்களும் மனோலயப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சாஸ்திரோக்தம் பேணும். ஏப்ரல் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் அதிகம் வரவாகும். மார்ச்சு 20தேதி ஆனல் நவீன வாகனம் தரும். ஆபரண பிராப்தியையளிக்கும். புத்திரருக்கு மேன்மை ஸ்திதியளிக்கும். விவகாரத்தில் வெற்றியளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை வைதீக நெறி தெய்வபக்தியில் நடந்து வரும். எல்லாவற்றிலும் உறுதிச் செயல்பாடாக நடத்தச் செய்யும். ஏப்ரல் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். ஓர் ஆபரணம் தரும். ஏப்ரல் 3 தேதியில் ஜீவனோபாயத்தில் பூர்வ பொருள் பிராப்தியில் ஓர் ஆதாயம் வரும். சகோதரர் அல்லது புத்திரருக்கு அரசு நன்மை ஏற்படுவதாகும். பசுபால் பிராப்தியளிக்கும். முயற்சியில் உள்ள எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். தாமபத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 5, 6, தேதிகள் சந்திராஷ்டமம். மார்ச்சு 17, 18 தேதிகளில் நல்ல வகை செலவு ஆகும். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வரும். செலவினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்துவத்துவம்கலைத்துறையில் ஸ்லாக்கிய பலனைஉண்டுபண்ணும், செய் தொழில் உத்தியோகத்தில் சுமந்துள்ள அலுவல்கள் நன்முறையில் பூர்த்தியாகும். மேலோர் நல்லோர்களால் நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு· திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் மார்ச்சு 19 தேதி ஆனல் பிரயோஜன சித்தியாகும். செய்தொழில் உத்தியோகத்தில் அரங்க நன்மை ஏற்பட்டு வரும். இயந்திர பிராப்தியில் நல்ல ஆதாயம் தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். ஓர் புத்திரோற்பத்தி ஆகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மார்ச்சு 14, ஏப்ரல் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். புதன்,வியாழன் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வரும். உடன் சாஸ்திரோக்த செலவும் புத்திரர் பௌத்திரர்கள் நலனுக்குரிய செலவும் ஆகச் செய்யும். நெறிமுறை செயல்களுக்கு வற்புறுத்தல் அல்லது போதனையில் உடனிருப்பவர் மாணுக்கர் மனக்கசப்புறினும் பின் போற்றுவர். அடிக்கடி வெளிப் பயணமும் நேரும். மார்ச்சு 20 தேதிக்கு பிரவிருத்திகளில் நல்ல பிரயோஜனம் வரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மார்ச்சு 15, 16 ஏப்ரல் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் மந்தஸ்திதியாக இருந்தவை பிரகாசத்திற்குவரும். அரசு நன்மை உண்டாகும். எல்லாக்காரியங்களும் கௌரவ ஸ்திதியிலேயே சித்திபெறும். தாரம்புத்திரர்களுக்கு சௌக்கியம்தரும். சுப நிகழ்ச்சிகளில் சந்துஷ்டி நிலவும். பொங்குசனியாக உள்ளவர்களுக்கு நலம் பல ஏற்படும். மார்ச்சு 17, 18 ஏப்ரல் 13 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவரு மானம் வரும். உடன் சமச்செலவும் ஆகும். மார்ச்சு 22 தேதி ஆனால் பொன்மணி வாங்குதல் ஆகும். எல்லாக்காரியங்களிலும் நெருக்கடி யாக வரும்போது பிரபலஸ்தர்களால் நன்மையை உண்டுபண்ணும். ஆயினும் துணையில்லாமல் எங்கும் செல்லுதல் கூடாது. தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மார்ச்சு 19, 20, 21தேதிகள் சந்திராஷ்டமம். சந்திராஷ்டமம் அல்லாத செவ்வாய், புதன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவரு மானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர் வளிக்கும். அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். இயந்திர சாதனம் ஒன்று வாங்குதல் ஆகும். பெரியவர் ஒருவர் மனஸ்தாபம் அல்லது விறுதன்மையில் விலகி இருந்துகொள்வர். புத்திரர் பௌத்திரர்களின் கல்வி கலைகளில் உயர்ஸ்திதி யளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுகமும் நிலவும். எல்லாக் காரியங்களும் பெருமதிப்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். மார்ச்சு 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். இதுவரையில் கௌரவத்தில் ஆன செலவினங்களுக்குத்தகுந்த பிரதிபலன்காணும். வித்துவத்துவத்தில் ஏப்ரல் 4 தேதி முதல் சன்மானதிகள் வருதல், உயர் ஸ்தானத்தில் அமர்வு ஆகிய நற்பலன் களையளித்துவரும். உயர்ந்தோர் நல்லோர் சந்திப்பு அளவளாவல் ஆகும். மிகவும் திடசித்தமாகக் காரியங்கள் அனைத்தையும் செயல்படுத்துதல் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம், ஞாயிறு, திங்கள் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V
பாடம் - 2.

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

ஸ்ரீ காசி விசுவநாதர் திருஅருட்பா
ஸ்ரீ விருத்த காளேச்சுரர் திருஅருட்பா

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

ஸ்ரீ கேதாரநாதர் திருஅருட்பா என்னும் இந்நூல் 11 பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் உள்ள பாடல்களை நுவலும் பொருள் வகையில் ஆறு கூறுகளாகப் பிரிக்கலாம் 1. சித்தாந்த சைவரின் சிறப்பு. 2. காசித்தலத்தின் பெருமை. 3. ஆட்கொண்டருளும் விளையாட்டு. 4. ஐந்தெழுத்தின் சிறப்பு. 5. வரலாற்றுக் குறிப்பு. 6 வேண்டுகோள். 2-ம் பாடல் சித்தாந்த சைவரின் சிறப்பையும் 7-ம் பாடல் காசித்தலத்தின் பெருமையினையும் 8-ம் பாடல் ஆட்கொண்டருளும் விளையாட்டினையும் 9-ம பாடல் ஐந்தெழுத்தின்சிறப்பினையும் 11-ம் பாடல் வரலாற்றுக் குறிப்பினையும் 3,4,5,6,10 ஆகிய பாடல்கள் வேண்டுகோள்களையும் கூறுவனவாய் அமைந்துள்ளன.

1. சித்தாந்த சைவரின் சிறப்பு :

இறைவன் எல்லாச் செயல்களுக்கும் காரணமாய் இருக்கிறார் என்று உணர்தலே சித்தாந்த சைவரின் கடமை என்றும் அங்ஙனம் உணர்ந்து விட்டால் எல்லாச் செயல்களிலும் இறைவனின் அருளையே கண்டு, நட்பு, பகை, நொதுமல் ஏதுவும் இன்றித்தன் வசம் இழந்து இறையருளையே துணையாகஎண்ணி வாழ்வர் என்றும் குருநாதர் கூறுகிறார்கள்.

சித்தினுக்கறிவுஞ் செடங்களுக்கசைவுமுன்
　　திருவருள் கொடுக்குமென்னுஞ்
சித்தாந்தருக் குலகில் நன்றேது தீதேது
　　சிறியரார் பெரியவர்க ளார்

வைத்தபுகழ் கூறுவோ ரார் பிறர்க ளார் பழியை
    வாய்மென்று திரிபவர்க ளார்
வணங்குவோ ரார் வணங்காதபே ரார் தம்மை
    வைத தெவர் வாழ்த்தினவ ரார்
கைத்திடும் பலகரு ராருறவ ரார்பொல்லாத
    கபடரார் நிட்கபடரார்
காயம் படைப்பாதி தொழில்களுக் கயனதி
    காரணர் களார் ப்ரபஞ்ச
கீர்த்திய மெலாமுநீ யென்றுசிறு நகைகொண்டு
    கெம்பீர ராயிருப்பார்.

என்று கூறுகிருர்கள்.

தருமை ஆதீனம் குருமுதல்வர், "நாட்டம் அதுவாய் நட..." என்று ஆணையிட்டதை ஈண்டு ஒப்பு நோக்கிச் சிந்திக்கலாம். இங்ஙனம் வாழ்வோர், இவ்வுலக இயக்கத்தைக் கண்டு துவண்டு விடாமல் சிறுநகை கொண்டு கம்பீரராயிருப்பர் என்று குருமூர்த்திகள் அருளியுள்ள குறிப்பு நம்மைச் சிலிர்க்க வைக்கிறது.

2. காசித்தலச் சிறப்பு :

காசித்தலத்தில் வாழவும் கங்கையில் மூழ்கவும் மணி கன்னிகைத்தடத்தில் படியவும் வேதம் புகழும் சிவஞான வாவியின் தீர்த்தம் பருகவும் அழகு பொழிகின்ற திருமேனி காணவும் உபய சரணம் பணியவும் என்ன பேறு பெற்றேன் என்று குருநாதர் கூறுமுகமாகக் காசிதலத்தின் சிறப்பினை அருளுகிருர்கள்.

என்ன மாதவ முன்பியற்றினே னெளியனே
    னிமையவர்கள் பணியவரிதாம்
ஏர்கொண்ட வலிமுத்த நகரத்திலே யென்று
    மிடையருதே வாழவும்
மன்னு கங்கா நதியின்மூழ்கவு மொருபெரிய
    மணிகன்னிகைத் தடத்தில்
வந்து படியவும் வேதமோது சிற் சிவஞான
    வாவியுதகம் பருகவும்
உன்னழகு பொழிகின்ற திருமேனி காணவு
    முயிரினுக் குயிராகியே
யுல்லாச பரமசக சானந்த வடிவான
    வுபயசரணம் பணியவும்
கின்னரரெனும்புலவர் முதலோர்கள் பாடுமிசை
    கேட்டருளு மிருசெவியனே.

3. ஆட்கொண்டருளும் விளையாட்டு :

என்னை அன்று முதல் இன்று வரை எடுத்து சீவனுக்குள் சீவனுய் அம்மை அப்பன் எனவே இருந்து எக்காலமும் எள்ளளவும் நீங்காமல் இருந்தருளும் நின் தருளைப் போற்றுவது ஒன்றே யான் செயவல்லது என்று 8 ஆம் பாடலில் மொழிகின்றார்கள்.

4. ஐந்தெழுத்தின் சிறப்பு :

அளவில்லாத பாவங்களையும் போக்கவல்லது ஐந்தெழுத்து மந்திரம். இதனை அப்பரடிகளும்,

" விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்விழல்
உண்ணிய புகிலது ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே "

என்று கூறுகிறார். இக்கருத்தினை 9 ஆம் பாடலில் விளக்குகிறார்கள் நான் செய்த பாவங்கள் அதிகம். அவற்றைப் போக்க உயிர் உள்ள மட்டும் உபவாசம் இருந்து பகல் இரவு உறங்காமல் தவம் இருந்து பரிகாரம் தேடினும் தீரா. நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் 'சிவா' எனும் உனது நாமம் என்றே நம்பினேன் என்று தெரிவிக்கிறார்கள்.

இரவுபக லல்லோர்கள் சொற்பனத் தும்பாவ
மெள்ளளவு செய்யார்கள்போல்
என்மனது மெய்மொழி களான் மறந்தும் புண்ய
மெள்ளளவு செய்த தில்லை
பரிவினுடன் வயதுள்ள மட்டு முபவாசமும்
பகலிர வுறங்கா மலே
பரிகார தவமேது செய்தாலு மணுவளவு
பரிசுத்த மாவதில் லா
நரகமிருபத்தெட் டெனுங்கோடி பற்றுத
நான்செய் பாவங்களுக்கு
நாசஞ்செய் பரிகார மொருசிவா வெனுமுனது
நாமமென்றே நம்பினேன்.

5. வரலாற்றுக் குறிப்பு :

இவர்கள், காசியில் குமரகுருபர முனிவரால் எழுப்பப்பெற்ற ஸ்ரீ கேதாரநாதர் திருக்கோயில் குறித்து 11 ஆம் பாடலில் குறிப்பு அருளுகின்றார்கள். வசிட்டன் எனும முனிவன் பணிதற்காக கேதார கட்டத்தில் எழுந்தருளினய் என்றும் எங்கள் குமரகுருபர

முனிவனுக்கு அடையாளம் காட்டித் திருக்கோயில் கட்டுவித்துக் கொண்டாய் என்றும் நின்மேல் கவிபாட என்னையும் அழைத்து வந்து அன்பர்களுடன் கூட்டுவித்தருளினாய் என்றும் கூறுகிறார்கள்.

பாசுபத மருள்பெறும் வசிட்டமுனி யென்கின்ற
பரமசிவ யோகிபணியப்
பரவு கேதாரமென வொரு வாரணாசியிற்
பரிவுடன் வந்திருந்தாய்
தேசுபெறு கமலைவரு ஞானசம் பந்தனருள்
சேர்குமர குருபரனெனுஞ்
சிவானந்த மாமுனிக் கடையாள மருளியுன்
திருக்கோயில் கட்டுவித்தாய்
ஆசுகவி நின்புகழ்கள் பாட அடியேனையும்
அழைத்துவந் தன்பருடனே
ஆனந்த கான மகலாமல் வைத்தனையுன
தருட்கருணை கூறவெளிதோ.

இதில் குமரகுருபர முனிவர் தருமை ஆதீனத்தின் சீடர் என்பதற்கு, "கமலை வரு ஞானசம்பந்தன் அருள் குமரகுருபரன்" என்று குறிக்கும் தொடர் சான்றாகத் திகழ்கிறது. அவரை, இக் குருநாதர், "சிவானந்த மா முனி" என்று எடுத்துப் பாராட்டுவது எண்ணத்தக்கது.

6. வேண்டுகோள் :

குருநாதர் முன்பு குறித்த வண்ணம் ஐந்து பாடல்களில் தமது வேண்டுகோள்களை அடுக்கியும் உள்ளம் உறை குறைகளை விளக்கியும் அருளியுள்ளார்கள். இவற்றில் 10 ஆம் பாடல் உருக்கமானது. இறைவனே! நான் காசியைவிட்டு அகலாதிருந்து உன்னைப்பாடி நிற்க அவ்வண்ணமே நீ ஆட்கொள்ளவேண்டும். மீண்டும் பிறந்து உழலக் கூடாது. பிறந்தால் உன்னடியாரின் திருவடித்தூசு என் தலைமேல்பட இறுமாந்து அக்கூட்டத்தின் நடுவே இருந்து அவர்களுக்குக் குற்றேவல் செய்து மகிழ வேண்டும். இவற்றை அருள்வாயாக! என்று வேண்டுகிறார்.

நாட்கமல மனையநின் திருவடித் தாமரையி
னவிலும் விண்ணப்ப முத்தி
நகராகு மவிமுத்த மகலா திருந்துன்னை
நான்பாட வேணு மெந்தை
யாட்கொண்டு முன்னிற்க வேணு மணிகன்னிகையி
லாவிவிட வருள்திரும்ப
வ்வதரித் துழலாது னடியடைய வேணுமிங்
கவதரித்தா லுன்டியார்

நாட்பொடிக ளென்றலையின் மேற்பரவ விருமாந்து
    சர்வசங்கத்யாகியாய்ச்
சகச பரமானந்த சுகபரவசமதாய
    தபோதனர்கள் குற்றேவலே
கேட்டவர முதவுதென் கமலையுங் கயிலையுங்
    கிரியுமுறை சிவலோகனே.

ஸ்ரீ கேதாரநாதர் திருவருட்பா எனும் நூல் வரலாற்றுக் குறிப்பினையும், ஐந்தெழுத்தின் சிறப்பினையும், காசித்தலத்தின் சிறப்பினையும் சைவரின் உள்ளக் கிடக்கையினையும் கூறுவதோடு அடியவர்கள் எங்ஙனம் பணிவுடன் இருக்கவேண்டும் என்பதையும் விளக்குகிறது. இத்தகைய சிறந்த பக்திப்பனுவலை அனைவரும் பயின்று தெளிந்து அவ்வண்ணமே வாழ்ந்து உய்திபெறுவார்களாக.

ஸ்ரீ விருத்தகாளேச்சுரர் திருஅருட்பா :

இதில் 10 பாடல்கள் அமைந்துள்ளன. காசியில் அமைந்துள்ள ஸ்ரீ விருத்த காளேச்சுரர் மீது பாடப்பெற்றது ஆதலின் இப்பெயர் பெற்றது. இதிலுள்ள பாடல்களைப் பொருள் வகையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. இறைவனின் வர்ணனையும் வேண்டுதலும். 2. தனித்த வேண்டுகோள். 3. சமத்கார விண்ணப்பம் 4. நாலாம் பதத்தில் நாட்டுக எனக்கேட்டல். இந்நூலை அருளிய பொழுது பத்தாவது குருமூர்த்திகளின் திருவுள்ளம் ஆறுதலை வேண்டியுள்ளது. இதில் ஆறு பாடகளில் "அஞ்சல் என்பாய்" என்று வேண்டுகின்ற குறிப்பு உள்ளது. இம்மைக்கும் மறுமைக்கும் துன்பமகற்றி இன்பம் தரவல்ல ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே உண்டு ஆதலின் அவரை "அஞ்சல் என்பாய்" என்று வேண்டுவது ஒருவருக்கு வேண்டப்படுவது. மற்ற மனிதர்கள் நம் துன்பங்களை நீக்கி ஆறுதல் தருவார்கள் என்று கருதுவதெல்லாம் தற்காலிகமானதே ஆகும். நிரந்தரமான ஆறுதலை இறைவன் ஒருவன் தான் அருளமுடியும் என்று முடிவெடுத்து குருமூர்த்திகள் இந்நூலில் வேண்டுகின்ருர்கல். திருஞானசம்பந்தரும், "ஐயனே! அஞ்சல் என்று அருள் செய்யெனை" என்று மதுரையில் ஆலவாய்ப் பதிகத்தில் அருளியுள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது.

இந்நூலில் முதல் ஆறுபாடல்கள் இறைவனின் வர்ணனையும் வேண்டுதலுமாகவும் 7, 8-ம் பாடல்கள் தனித்த வேண்டுகோளாகவும் 9-ம் பாடல் சமத்கார விண்ணப்பமாகவும் 10-ம் பாடல் நாலாம் பதத்தில் நாட்டுக எனக் கேட்பதாகவும் அமைந்துள்ளன.

1. இறைவனின் வர்ணனையும் வேண்டுதலும் :

பெருமைகளையுடைய தெய்வமே! பாம்புமாலையுடையோனே! அற்புதனே! அம்பலவனே! திருவாரூரை இருப்பிடமாகக்கொண்டவனே ! உன்னை நம்பினேன் ! அஞ்சல் என்பாய் என்று முதல் பாடலில் வேண்டுகின்றார்.

" சீரனே கம்குலவுந் தெய்வமே செங்கணர (வு)
ஆரனே அற்புதனே அம்பலவா தென்கமலை
ஊரனே அஞ்சலென்பா யுன்சரண நம்பிநின்றேன்
வீரனே காசி விருத்தகா ளேச்சரனே. "

இப்பாடலில், " தென்கமலை ஊரனே " என்னும் விளி ஈண்டு எண்ணத்தக்கது. பொதுவாக முன்னோர் நூலை நன்கு கற்றவர்கள் பின்பு நூல் எழுதத் தொடங்கும் பொழுது அவர்களின் நூலில் முன்னோர் தாக்கம் படிவது இயற்கை. அவ்வகையில் 10 ஆவது குருமூர்த்திகள் பாடலில் ஆதிகுருமூர்த்திகள் குருஞானசம்பந்த சுவாமிகளின் பாடல் தாக்கம் நேர்ந்துள்ளது. குருஞானசம்பந்தர் அருளிய "சித்திதருநாதன்......" என்னும் பாடலில் "தென் கமலை வாழ் நாதன்" என்னும் தொடர் வருகிறது. அதனை நினைவோடு ஈண்டு 10 ஆவது குருமூர்த்திகள், இறைவன் எங்கெங்கு இருக்கின்றான் என்று அருள வந்தவர்கள், 'அம்பலவாணனாக இருக்கின்றான்...' மேலும் "தென்கமலை (திருவாரூர்) ஊரனாகவும்" இருக்கின்றான் என்று அருளுகின்றார்கள்.

ஆண்டவன் அறிவாம்திருவுரு உடையவன்; திருநீறும், சிவந்த முகமும், புத்தகமும், நெருப்புக், கோபமான அரவமும மெய்ஞ்ஞான முத்திரையும் கொண்டு விளங்குகின்றான் என்று இரண்டாவது பாடலில் அருளுகின்றார்கள்.

" சித்துருவும் நீறுந் திருவருள்சேர் செம்முகமும்
பொத்தகமும் அக்கினியும் பொங்கரவுப மெய்ஞ்ஞான
முத்திரையுங் காட்டுதரு மூர்த்திகொடு வந்தருள்வாய்
வித்தகனே காசி விருத்தகா ளேச்சுரனே. "

இப்பாடலில், "குருமூர்த்தி கொடுவந்தருள்வாய்" என்று வேண்டுவது சிந்திக்கத்தக்கது. சென்ற பாடலில் "தென்கமலை ஊரனே" என்று விளித்து நிறுத்தியவர்கள், இப்பாடலில் "குருமூர்த்தி கொடு வந்தருள்வாய்" என்று குறிப்பது சிந்தனைத் தொடர்ச்சியைக் காட்டுகிறது. தருமை ஆதி குருநாதருக்குத் திருவாரூர் வாழ் ஞானப் பிரகாசர் குருமூர்த்திகள் ஆதலின் 10 ஆவது குருமூர்த்திகள் தம் குருநாதருக்குக் குருநாதராக இலங்கியவர் ஆரூர் ஞானப்பிரகாசர் என்பதை நினைவு கூர்ந்து. "தென்கமலை ஊரனே!" "குருமூர்த்தி

கொடு வந்தருள்வாய்'' என்று அடுத்தடுத்த பாடல்களில் குறிக்கின்றார்கள் என எண்ணலாம்.

ஒளிமயமானவனாகவும் அழகியைத் தன் மெய்யில் கொண்டவனாகவும் ஒன்றான ஆனந்தமான முதல்வனாகவும் வேதங்களைத் தந்தவனாகவும் உள்ளவனே! நாய்போன்ற என்னை அஞ்சல் என்று கூறிக் காத்திடுவீராக! என்று வேண்டுகின்றார்கள்.

"சோதியனே மாமலைவாழ் சுந்தரியோர் மெய்யிலொரு
பாதியனே யேகபர மானந்த நாயகனே
ஆதியனே நாயேனை யஞ்சலஞ்ச லஞ்சலென்பாய்
வேதியனே காசி விருத்தகா ளேச்சுரனே."

என்பது அப்பொருள் அமைந்த பாடல்.

நான்காவது பாடலில் நான்முகனும் நாராயணனும் தேடியும் காணமுடியாத சோதிப்பிழம்பு இறைவன் என்னும் குறிப்பும் ஐந்தாவது பாடலில் பிறவியாகிய பிணியையும் பிறந்த பின்பு உறும்பிணிகளையும் நீக்கியருள்க என்னும் வேண்டுகோளையும் ஆறாவது பாடலில் மாணிக்க மலையாகவும் தூயதிருநீறு பொருந்திய சோதியாகவும் இலங்கும் இறைவனே! நோயில் சிக்கிய என்னை அஞ்சல் என அருள்வீராக! என்றும் வேண்டுகின்றார்கள்.

"கமலமலர் மேலயனும் கட்செவிமேல் நாரணனும்
தமலமக லாமலே தாழ்முடிகள் தேடவே
அமலமாய் நின்றா யநாதநீ யஞ்சலென்பாய்
விமலனே காசி விருத்தகாளேச் சுரனே."

"கூற்றினைப்போல் முன்னே குரம்பைப் பிணியதன்மேல்
வேற்றுநர கங்களைப்போல் வேறுபிணி மேவுதலால்
ஆற்றே னடியேனை அஞ்சலஞ்ச லஞ்சலென்பாய்
வீற்றிருக்குங் காசி விருத்தகா ளேச்சுரனே."

"மையமருங் கண்டனே மாணிக்க மாமலையே
துய்யவெண்ணீ றங்கமெங்குந் துன்னமொரு சோதியனே
ஐயனேநோ யிலடிபட் டேனையஞ் சலென்பாய்
மெய்யனே காசி விருத்தகா ளேச்சரனே.

என்பன அக்கருத்தமைந்த பாடல்கள்.

2. தனித்த வேண்டுகோள் :

நோய்களில் விழுந்து வருந்தும் என்னை அவற்றினின்று நீக்கி இடரகற்றி இவ்வுலகிலேயே உன் நண்பனாக ஆட்கொண்டு இன்பத்தினை அருளுக என்று ஏழாவது பாடலிலும் என்னுள்ளம், மேட்டினின்று பள்ளம்நோக்கி ஓடிவருகின்ற தண்ணீரைப்போல் உன்பால்

அன்பால் ஓடி வந்து ஒன்றும்படி அருள்வாய் என்று எட்டாவது பாடலிலும் வேண்டுகின்றார்கள்,

3. சமத்காரமான விண்ணப்பம் :

பொய்யென்று சொல்லும் எனதுமெய்யைச்சார்ந்த பிணிகளைப் போக்குவேன் என்ற உனதுசொல்லை, கையின் கண்ணுள்ளநெல்லிக் கனி போல் தெளிவாக உணர்ந்து உன்கழல் அடைந்தேன். இப்பொழுது என் நோயை அகற்றுவிடில் அந்த உரை பொய்யாகி விடும்! இறைவா! என்ன செய்ய இருக்கிறாய்! என்று மிகவும் சாதுர்யமாகக் குருமூர்த்திகள் ஒன்பதாவது பாடலில்கேட்கிறார்கள்.

"பொய்யான மெய்ப்பிணிகள் போக்குவே னென்னுமுரை
கையான நெல்லிபோல் கண்டுன் கழலடைந்தேன்
ஐயாவென் னோயை அகற்றாயே லந்தவுரை
மெய்யாமோ காசி விருத்தகா ளேச்சுரனே."

இப்பாடலில், "ஐயா என்நோயை அகற்றாயேல் அந்த உரை மெய்யாமோ" என்று கேட்பதில் குருமூர்த்திகளின் சமத்காரம் புலப்படுகிறது.

4. நாலாம் பதத்தில் நாட்டியருள்க :

நிறைவாகப் பத்தாவது பாடலில், என் நோயை அகற்றுதல் என்பது நாலாம்பதம் எனப்படுகின்ற சாயுச்சிய பதத்தில்சேர்ப்பது; எனவே அதனைத்தந்தருள்க என்றுவேண்டுகின்றார்கள். சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன உயிர் அடைகின்ற நான்கு பதங்கள். இவற்றில் சாயுச்சிய பதமே நிறைவானது. அதனைக் குருநாதர் இதில் வேண்டுகின்றார்கள்.

"காலாதீ தஞ்சேர் கருணைகண சீகரஞ்சேர்
பாலாழி யாகிப் பரவெளியா யொன்றுருகு
நாலாம் பதத்திலெனை நாட்டியஞ்ச லஞ்சலென்பாய்
மேலாகும் காசி விருத்தகா ளேச்சுரனே."

என்பது அப்பாடல்.

எளிய சொற்களால் அரிய கருத்துக்களைக்கூறி ஆன்ம வேட்கையையும் அழகுற விளக்கியுள்ள இந்நூலைக் குருவருள் துணையுடன் பயின்று நலமடைதல் நமது கடமை.

பங்குனி மாதச் சிறப்பு நாட்கள்

14—3—89 செவ்வாய், ஷடசீதி புண்யகாலம் காரடையான் நோன்பு, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். மீன - ரவி 11-50.

15—3—89 புதன், திருவையாறு அந்தணர்புரத்தில் திருநந்தித்தேவர் ஜனனம். இரவு பட்டாபிஷேகம். (திருவாதிரை).

16—3—89 வியாழன், திருவையாறு திருமழபாடியில் நந்திதேவருக்குத் திருக்கல்யாணம். (புனர்வசு).

17—3—89 வெள்ளி, பங்குனி உத்திரப் பெருவிழாவில் சகோபுர ரிஷப வாகனக்காட்சி. வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஸ்ரீ பாலாம்பிகை உடனுறைகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமியை பூஜித்தல். பூச்செண்டு பெறுதல். ஸ்ரீ முனையடுவார் நாயனார் குருபூஜை.

19—3—89 ஞாயிறு, ஆயில்யவிழா. பிரதோஷம். பங்குனி உத்திரப் பெருவிழாவில் திருத்தேர்.

21—3—89 செவ்வாய், காமதகனம். ஹோலிப்பண்டிகை.

22—3—89 புதன், பங்குனி உத்திரம். வேளூர், திருவையாறு, திருபுவனம் முதலிய தலங்களில் உத்திரபாத தீர்த்தம். திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி ஸ்ரீபிரகன்நாயகி அம்பாளுக்கு சிவபஞ்சாக்ஷர உபதேசகாக்ஷி. இரவு ரிஷபவாகனக்காட்சி. தருமை 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் சுக்கில வருஷத்திய குருபூசை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டு பூசையில் வைத்தருளல், பௌர்ணமி விரதபூசை.

23—3—89 வியாழன், திருநின்றியூர், திருமுல்லைவாயில் சம்வத்ஸரா

25—3—89 சனி, ஸ்ரீ காரைக்காலம்மையார் குருபூஜை. [அபிஷேகம்.

26—3—89 ஞாயிறு, சங்கடஹரசதுர்த்தி. திருபுவனம் சரபர் உற்சவம்.

27—3—89 திங்கள், சீகாழி ஸ்ரீ பிரம்மபுரீசுவர சுவாமிக்கு சம்வத்ஸரா அபிஷேகம். தருமை ஆதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

3—4—89 திங்கள், பிரதோஷம். ஸ்ரீ தண்டி அடிகள் குருபூஜை.

5—4—89 புதன், சர்வ அமாவாசை.

6—4—89 வியாழன், வசந்த நவராத்திரி ஆரம்பம்.

7—4—89 வெள்ளி, ஸ்வேதவராஹகல்பாதி. தெலுங்கு வருடப்பிறப்பு.

8—4—89 சனி, கிருத்திகை விரதம். [யுகாதிப் பண்டிகை

9—4—89 ஞாயிறு, வேளூர் கிருத்திகை. தருமை சண்முகர் அபிஷேகம்..

10—4—89 திங்கள், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி சம்வத்ஸரா அபிஷேகம். ஸ்ரீ நேச நாயனார் குருபூஜை.

11—4—89 செவ்வாய், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி சம்வத்ஸரா அபிஷேகம்.

12—4—89 புதன், சீகாழி, கடவூர், பனந்தாள் முதலிய தலங்களில் சைத்ர உற்சவ ஆரம்பம். ஸ்ரீகணநாதநாயனார் குருபூஜை.

13—4—89 வியாழன், திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். மேஷரவி 32-11. திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்ஸரா அபிஷேகம். சீகாழி திருமுலைப்பால் உற்சவம். ஸ்ரீ தொகையடியார்கள் குருபூஜை.

14—4—89 வெள்ளி, சுக்கில ஆண்டு தமிழ் வருடப்பிறப்பு. நிம்பகுஸும பக்ஷணம். புதுப் பஞ்சாங்க படனம். வசந்த நவராத்திரி பூர்த்தி. ஸ்ரீராமநவமி. சுக்கில - நவ - திதி.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ
சிவமயம்
திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீசுவரன் கோயில்.
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு
சுக்கில ஆண்டில்
மாதந்தோறும் நடைபெறும்

கிருத்திகா நட்சத்திர அபிஷேகநாள் விபரம்

சித்திரை	23	6— 5—89	சனிக்கிழமை
வைகாசி	20	2— 6—89	வெள்ளிக்கிழமை (மண்டலாபிஷேககிருத்திகை)
ஆனி	16	30— 6—89	வெள்ளிக்கிழமை
ஆடி	12	27— 7—89	வியாழக்கிழமை
ஆவணி	7	23— 8—89	புதன்கிழமை
புரட்டாசி	4	20— 9—89	புதன்கிழமை
ஐப்பசி	1	17—10—89	செவ்வாய்க்கிழமை
ஐப்பசி	28	13—11—89	திங்கட்கிழமை
கார்த்திகை	26	11—12—89	திங்கட்கிழமை (திருக்கார்த்திகைதீபம்)
மார்கழி	23	7— 1—90	ஞாயிற்றுக்கிழமை
தை	21	3— 2—90	சனிக்கிழமை
மாசி	19	3— 3—90	சனிக்கிழமை
பங்குனி	17	30— 3—90	வெள்ளிக்கிழமை

குறிப்பு :- திருவிளக்கு அறக்கட்டளை நிதிக்குத் தொகை செலுத்தி அருள்பெறுக. விபரம் தேவஸ்தானம் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-3-89